வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 20/=

Eelanadu ஈழநாடு

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 19.02.2022 சனிக்கிழமை | இதழ் : 76 | பக்கங்கள் : 16

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் கிளிநொச்சியில் நாளை போராட்டம்!

சகலரையும் பங்கேற்குமாறு அழைப்பு

கிளிநொச்சி, பெப்ரவரி 19

கிளிநொச்சியில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள மாபெரும் போராட்டத்திற்கு அனைத்துப் பொது அமைப்புக்கள், சங்கங்கள், பொது மக்கள், அரசியல் வாதிகள் என அனைவரும் பங்குகொண்டு எமக்கு ஆதரவைத் தர வேண்டும். இதன் மூலம் சர்வதேசத்திடம் நீதியை பெற்றுத்தருவதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் எமக்கு தேவை", என்று வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. 15

கையளிக்கப்பட்ட எங்களின் உறவுகளுக்கு என்ன நடந்தது?

காணாமலாக்கப்பட்டோர் சங்கம் கேள்வி

கிளிநொச்சி, பெப். 19

"உயிரோடு இல்லாதவர்களை கேட்டால் எப்படி தருவது என்று நீதி அமைச்சர் கேட்கின்றார் எனில் கையளிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்று வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் உப செயலாளர் ரத்தீஸ்வரன் கவிதா கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "இராணுவத்தினர் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்களை சரணடையுமாறும், விசாரணைகளின் பின்னர் விடுதலை செய்வதாகவும் தெரிவித்த நிலையில் எனது கணவர் இராணுவத்தினரிடம் சரணடைந்தார். அவர் மாத்திரமல்லாது எனது கண் முன்பாக மூன்று பேருந்துகளில் 15

மார்ச்சில் இலங்கை வருகிறார் அமெ. உதவி இராஜாங்க செயலர்

கொழும்பு, பெப். 19

மனித உரிமைகள், வர்த்தகம் மற்றும் முதலீடு சம்பந்தமாக பிரதானமாக கவனம் செலுத்தப்படும் பேச்சுவார்த்தைக்காக அமெரிக்காவின் உயர் அதிகாரி ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

அமெரிக்காவின் தெற்கு 15

எரிபொருள் மீதான வரியை நீக்குங்கள்!

அமைச்சர் அரசிடம் கோரிக்கை

கொழும்பு, பெப். 19

எரிபொருள் மீதான வரியை நீக்குமாறு எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில கோரிக்கை விடுத்துள்ளார்.

நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் இவ்வாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

எழுத்து மூலம் இந்த வேண்டுகோள் விடுத்துள்ளதாக எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில மேலும் கூறினார். (அ)

வீடுடைத்து நகைகளை களவாடி ஹெரோயின் வாங்கியோர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 19

வீடு உடைத்து நகைகளைத் திருடி ஹெரோயின் போதைப் பொருளை வாங்கிய பிரதான சூத்திரதாரி உட்பட மூவரைத் தாம் கைது செய்துள்ளனர் என்று யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஜனவரி 28ஆம் திகதி யாழ்ப்பாணம் - கலட்டி - பிறவுண் வீதியி 15

இரு முறை மின்வெட்டு நாடு முழுவதும் அமுல்!

வடக்கு மாகாண விவரம்

யாழ்ப்பாணம், பெப். 19

நாடு முழுவதும் நாளாந்தம் இருமுறை மின்வெட்டு நடைமுறை நேற்று முதல் அமுல்படுத்தப்பட்டது.

பிற்பகல் 2.30 மணி முதல் மாலை 6.30 மணி வரை ஒரு மணி நேரமும், மாலை 6.30 மணி முதல் இரவு 10.30 மணி வரை 45 நிமிடங்களும் 15

'13'ஐ வலுப்படுத்தியிருந்தால் அழிவுகளை தடுத்திருக்கலாம்

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

கொழும்பு, பெப். 19

தன்னால் ஆரம்பத்திலிருந்து வலியுறுத்தப்பட்டு வந்த13 ஆம் திருத்தச் சட்டத்தை வலுப்படுத்தியிருந்தால் பெரும் அழிவுகளை தடுத் திருக்க முடியும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் வெளியீட்டுப் பணியகத்தின் கிளை காரியாலயத்தை நேற்று ஊடக 15

கொரோனாவுக்கு 23 பேர் பலி!

கொழும்பு, பெப். 19

நாட்டில் நேற்றுமுன்தினம் கொரோனா தொற்றால் 23 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 30 - 59 வயது பிரிவில் 5 ஆண்களும், 3 பெண்களுமாக 8 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 12 ஆண்களும் 3 பெண்களுமாக 15 பேரும் உயிரிழந்தனர். 15

இலங்கையுடன் இணைந்து பணியாற்றுவதில் ஆர்வம்!

அமெரிக்காவின் புதிய தூதுவர்

கொழும்பு, பெப். 19

இலங்கை அரசாங்கம், சிவில் சமூகம் மற்றும் பொதுமக்கள் ஆகிய தரப்புக்களுடன் இணைந்து பணியாற்ற தாம் ஆர்வத்துடன் உள்ளதாக இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

கொழும்புக்கு புறப்படுவதற்கு முன்னர், அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்ரனி பிளிங்கென்னை சந்தித்தார் என டுவிட்டர் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கான அடுத்த அமெரிக்க தூதுவராக இருப்பதில் தான் பெருமை கொள்வதாக, இராஜாங்க செயலாளரிடம் கூறியதாகவும் ஜூலி சங் தெரிவித்துள்ளார். (அ)

மருத்துவர்களின் போராட்டம் கைவிடப்படுவதாக அறிவிப்பு

கொழும்பு, பெப். 19

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் முன்னெடுக்க விருந்த தொழில் சங்க போராட்ட நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பிரகாரம் இந்தப் போராட்டத்தை தற்காலிகமாகக் கைவிடத் தீர்மானித்துள்ளதாக 15

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் வழக்கு; ஹேமசிறி, பூஜித் நேற்று விடுதலை!

கொழும்பு, பெப். 19

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலை தடுக்க நடவடிக்கை எடுக்காதது சம்பந்தமாக தொடரப்பட்டுள்ள அனைத்து வழக்குகளில் இருந்தும் முன்னாள் பாது காப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

சிறப்பு மேல் 15

சுடர்நாடு

இப்படியும் நடக்கிறது...!

இந்தியாவிலிருந்து ஓர் அரசியல் பிரமுகர் தொலை பேசியில் தொடர்புகொண்டு, ஆறு தமிழ் கட்சிகள் நடத்திய கூட்டம் எப்படி நடந்தது என்று கேட்டார்.

அவர் இந்தியாவிலிருந்து அழைத்ததால் அவர் இந்தியர் என்று நினைத்துவிட வேண்டாம்.

அவர் நமது அரசியல் பிரமுகர்தான். தற்போது இந்தி யாவில் நிற்பதால் தொலைபேசியில் தொடர்புகொண்டார்.

"கூட்டம் அல்லது கருத்தரங்கு என்றால் மண்டபம் நிரம்பினால் வெற்றிதானே" என்றேன்.

வழக்கம்போல மாவை சேனாதிராசா இந்தக் கூட்டத்திற்கு வரவில்லை. அவருக்கு அதைவிட முக்கியமான வேலை ஏதாவது இருந்திருக்கும் என்று அவருக்காக 'வக்காலத்து' வாங்கினேன்.

அவர் இடைமறித்து, "ஓமோம், உம்மட யானை இன்ன மும் அந்தக் கயிற்றை அறுத்துக்கொண்டு வரவில்லைத்தானே" என்றார்.

'மாவை சேனாதிராசா ஒரு யானை போன்ற பலம் உள்ள ஒருவர். ஆனால், அவரை சிலர் கயிறு ஒன்றினால் கட்டி வைத் திருக்கிறார்கள்' என்று முன்னர் ஒருதடவை இந்தப் பத்தியில் எழுதியதைத்தான் அவர் கேலி செய்கிறார் என்பது தெரிந்ததுதான்.

மாவை காலத்திலேயே, ஏன் அவரோடு கூடவே, அரசிய லுக்கு வந்தவர் அவர். மாவை எத்தகைய ஆளுமை உள்ளவர் என்பது குறித்து அவர் எனக்கு வகுப்பெடுக்க ஆரம்பித்து விட்டார்.

கட்சியின் தலைவராக இருந்தபோதிலும் அவர் கடந்த தேர்தலில் ஏன் வெற்றிபெறவில்லை என்பது வரை அவர் தனது கருத்துக்களை சொல்லி முடித்தபோது, மாவை பற்றிய எனது கணிப்பில் சில மாற்றங்கள் எற்படுவதைத் தவிர்க்க முடியவில்லை.

மாவை அந்தக் கூட்டத்திற்கு ஏன் வரவில்லையாம் என்பதை அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஒரு பேச்சாளரி டம் கேட்டேன்.

அதற்கு அவர் சொன்னார், கொரோனா தொற்று ஏற்பட்டு தனிமைப்படுத்தலில் இருந்தாராம். கூட்டம் நடந்த அன்று தான் பதின்நான்கு நாட்கள் முடிந்ததால் டாக்டரிடம் கேட்ட போது, அவர் மக்கள் அதிகம் கூடும் இடத்திற்கு போவதைத் தவிர்ப்பது நல்லது என்று ஆலோசனை கூறியிருந்ததால் வரவில்லை. மற்றும்படி, அந்தக் கூட்டத்தை பகிஷ்கரிக்க வேண்டும் என்ற எண்ணம் எதுவும் இல்லை. இன்று இரவுகூட 'சூம்' வழி கலந்துரையாடல் ஒன்றில் விக்னேஸ்வரனுடன் கலந்துகொண்டேன் என்று விளக்கமளித்தாராம் மாவையர்.

கொரோனா தொற்று உறுதியானவர்கள் இப்பொது ஏழு நாட்கள் மாத்திரமே தனிமைப்படுத்தப்படுகின்றனர் என்பது கூட மாவையருக்கு தெரிந்திருக்கவில்லை. அதேவேளை, அந்தக் கூட்டம் நடந்த அன்று காலை பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக்கோரும் கோரிக்கை மனுவில் யாழ். பஸ் நிலையத்தில் பலர் மத்தியில் நின்று (கவனிக்கவும் சமூக இடைவெளியை கருத்தில் எடுக்காமல்) கையெழுத்திட்டார் மாவை என்ற செய்தியும் படங்களுடன் பின்னர் வெளிவந் திருந்தது.

மாவையர் பற்றி இந்தியாவிலிருந்து அந்த பிரமுகர் சொன் னவை எவ்வளவுதூரம் சரியானவை என்பதை அப்போது அறியமுடிந்தது.

கூட்டம் நடந்த அன்றுதான் அவரின் தனிமைப்படுத்தல் முடிவுக்கு வந்தது உண்மையாகவே இருக்கட்டும். ஆனால், அந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது அதற்கு முதல் வாரம். அது, பின்னர் ஒரு வாரத்திற்கு பின்போடப்பட்டது. அப்படியெனில், மாவையர் என்ன செய்திருக்கவேண்டும்? கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டபோதே தனது நிலைமையை விளக்கிக்கூறி, கட்சியின் சார்பில் வேறு ஒருவரை அனுப்பியி ருக்கவேண்டும். ஆகக்குறைந்தது நிலைமையை விளக்கி, கூட்டத்தில் வாசிக்கச் சொல்லி தனக்கு தரப்பட்ட தலைப்பில் தான் சொல்லவந்த கருத்தை எழுதியாவது அனுப்பியிருக்க வேண்டாமா?

இப்படியெல்லாம் செய்யவேண்டும், அதுதான் தலைவ ருக்கு அழகு என்றால் - அது எல்லாம் தெரிந்திருந்தால் - கட்சியை இப்படி அதலபாதாளத்திற்கு தள்ளிவிடுகின்ற காலத்தில் தலைமையில் இருந்திருப்பாரா மாவையர் என்றும் கேட்காமல் இருக்கமுடியவில்லை.

ஆறு கட்சிகளின் ஆதரவு இருந்தால்தான் அடுத்த முதல மைச்சர் கனவு நனவாகும் என்பதற்காக அவர்களுடனும் நட்பில் இருக்கவேண்டும், கட்சியை ஒரு தலைவராக வழி நடத்திச் செல்ல தன்னால் மாத்திரம் முடியாது என்பதால் கட்சியில் உள்ள மற்றவர்களும் தேவை. அவர்களையும் பகைக்கக்கூடாது என்று இரட்டைத் தோணியில் கால் வைத்துக்கொண்டு பயணித்தால், ஒரு கட்டத்தில் இரண்டு கால்களுமே இரண்டு தோணிகளிலுமிருந்து தவறிவிடும்.

கடலில் விழுந்துதான் ஆகவேண்டி வரும்.

மாவையர் எந்தக் கட்டத்திலுமே தனித்து முடிவெடுக்கின்ற ஒரு 'தலைவராக' இருந்ததில்லையே என்ற அந்த நண்பரின் கருத்தை ஏற்காமல் இருக்கவும் முடியவில்லை!

- ஊர்க்குருவி

நாடக அரங்கியல் டிப்ளோமா பயிற்சி

யாழ்ப்பாணம், பெப். 19

டவர் நாடகப் பாடசாலை ஊடாக நாடக அரங்கியல் இரு ஆண்டு முழு நேர உயர் டிப் ளோமா நாடக அரங்கியல் கல்வி மாணி கற்கைநெறிக்கு இட்டுச் செல்லக்கூடிய இரு ஆண்டு பயிற்சிநெறி சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சியில் தேர்ச்சி பெறுகின்ற மாணவர்கள் திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வி மாணிப் பாட்டத்தை தொடர்வ தற்கான ஆரம்பக் கட்ட நடவடிக் கைகள் நடைபெற்று வருகின்றன.

க.பொ.த (சா.த) பரீட்சை யில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு 6 பாடங்க ளில் கட்டாயம் சித்தியடைந்தி ருத்தல் வேண்டும். அத்து டன்,க.பொ.த (உ.த) பரீட் சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு ஒரே தட வையில் (03) பாடங்களில் ஏதா வது ஓர் அமர்வில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.

மேலதிகத் தொடர்புகளுக்கு தமிழ் நாடக அபிவிருத்திப் பிரிவு பிரதிப் பணிப்பாளர் கலாநிதி சண்முக சர்மா ஜெயப் பிரகாசுடன் தொடர்பு கொள் ளவும் தொ.பே.இல - 077 791 1425. இந்தப் பாட நெறிக்கான விண்ணப்பப்படிவங்களை www.towerhall.lk, www.northernprovince.lk, www.np.gov.lk, edumin.np.gov.lk இணையத்தளங்களில் பெறலாம்.

நிலைபெறுதகு வலு அதிகார சபைக்கு ஜனாதிபதி நேற்று திடீரென்று விஜயம்

கொழும்பு, பெப். 19

கொழும்பு 07, ஆனந்த குமாரசுவாமி மாவத்தையில் அமைந்துள்ள இலங்கை நிலைபெறுதகு வலுச்சக்தி அதிகார சபைக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று வெள்ளிக்கிழமை திடீர் விஜயத்தை மேற்கொண்டார்.

நீர், சூரிய சக்தி, காற்று போன்ற மீள்புதுப்பிக்கத்தக்க சக்திவலுக்களைக் கொண்டு மின்னுற்பத்தியை மேற்கொள் வதற்குள்ள இயலுமை தொடர் பில், இலங்கை நிலைபெறுதகு வலுச்சக்தி அதிகார சபையின் அதிகாரிகளை நேரடியாகச் சந்தித்துத் தகவல் தெரிவித்து கொள்ளும் நோக்கிலேயே, ஜனாதிபதி இந்தத் திடீர் விஜயத்தை மேற்கொண்டார்.

"சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்துக்க மைய, 2030ஆம் ஆண்டா கும்போது இந்த நாட்டின் மொத்த மின்னுற்பத்தியில் 70 சதவீதத்தை மீள்புதுப் பிக்கத் தக்க சக்தி வலுக்களின் மூலம் பெற்றுக்கொள்வதே அரசாங் கத்தின் நோக்கமாக உள்ளது.

அதேபோன்று, நாட்டுக்குள் தற்போது ஏற்பட்டுள்ள மின் சார நெருக்கடிக்கு, மீள்புதுப் பிக்கத்தக்க சக்திவலுப் பயன் பாட்டின் மூலம் குறுகிய காலத் துக்குள் தீர்வு காண்பதற்குள்ள இயலுமை தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது.

இதேவேளை, புதிதாக ஆரம் பிக்கக் கோரிக்கை விடுக்கப்பட் டுள்ள மீள்புதுப்பிக்கத்தக்க சக்திவலுப் பயன்பாட்டிலான திட்டங்களுக்கு அனுமதி வழங் குவதில் ஏற்பட்டுள்ள தாமதங் கள் தொடர்பில் ஆராய்வதும், இந்த விஜயத்தின் நோக்கமாக அமைந்திருந்தது என தெரிவிக் கப்பட்டது. (அ)

தோல்வி கண்டுள்ள அரசாங்கத்துக்கு பதிலளிக்க மக்கள் காத்திருக்கின்றனர்

கல்முனையில் சொன்னார் சஜித்

கல்முனை, பெப். 19

சகல விடயங்களிலும் தோல்வி கண்டுள்ள இந்த அர சாங்கத்துக்கு எதிர்வரும் தேர் தலில் பதிலளிக்க மக்கள் காத்தி ருக்கிறன்றார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கல்முனை ஆதார மருத்து வமனைக்கு மருத்துவ உபகர ணங்களை கையளிக்கும் நிகழ்வி லேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, எதிர்க் கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரை யாற்றுகையில்: "தற்போதைய அரசாங்கத்திடம் முறையான முன்கூட்டிய திட்டமிடல் இல்லாமையாலேயே நாடு இன்று பெரும்பொருளாதார பின்னடைவைக் கண்டுள்ளது.

"கொரோனாவால் பாதிப் புக்குள்ளான மக்களுக்கு சுகா தார ரீதியாக நிவாரணங்களை வழங்கும் பொருட்டு, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு, அமைப் பாளர்கள், ஆதரவாளர்கள் மற்றும் நன்கொடையாளர் களின் பங்களிப்புடன் உதவித் திட்டங்கள் அமுல்படுத்து கின்றன.

"உலகிலேயே ஓர் எதிர்க் கட்சி மக்களின் நலனுக்காக அரசு போன்று பெரும் தொகைப் பணத்தை செலவு செய்கிறோம் என்றால், அது நாம்தான்.

"அரசாங்கத்திடம் பொரு ளாதாரம், விவசாயம் மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளில் ஒழுங்கான திட்டமிடல் இல்லை. கொரோனா போன்ற அனர்த்த நிலைமைகளின் போதும் எவ்வாறு முன் ஆயத்தங்களு டன் செயல்பட வேண்டும் என்றும் தெரியாது.

"தேர்தல் ஒன்று வருகின்ற போது, பொதுமக்கள் இவர்க ளுக்கான ஒழுங்கான பதிலை வழங்கக் காத்திருக்கின்றார்கள்" என்றார்.

(ஐ)

யா/காங்கேசன்துறை நடேஷ்வர கனிஷ்ட வித்தியாலயத்தின் 1996ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களால் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறை திறப்பு விழா நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஈழநாடு
Eelanadu
19.02.2022 சனிக்கிழமை
ஈழநாடு
பிலவ வருடம், மாசி 07

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

அரசியல் தீர்வை அடையும் வழி?

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்ன - இப்படியொரு கேள்வியை எழுப்பினால் - தமிழ்த் தேசிய பரப்பிலுள்ள அனைவராலும் பதிலளிக்க முடியும். கூட்டமைப்பினர் சமஷ்டி என்பார்கள். முன்னணியினர் ஒரு நாடு இரு தேசங்கள் தீர்வு என்பார்கள். விக்னேஸ்வரன் கூட்டுச் சமஷ்டி என்பார். இவ்வாறு பதிலளிப்பவர்களிடம் - சரி, நீங்கள் கூறுவதை எவ்வாறு அடையப் போகின்றீர்கள் - அதற்கான வழிமுறையென்ன என்று கேட்டால், அவர்கள் எவரிடமும் பதிலிருக்காது. ஒரு காலத்தில் தனிநாட்டு கோரிக்கையை முன்வைத்த தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் அதனை அடைவதற்கான எந்தவொரு வழிமுறையும் இருந்திருக்கவில்லை.

விடுதலை இயக்கங்களிடம் ஒரு தெளிவான பதிலிருந்தது. அதாவது, ஆயுத பலம் கொண்டு தனிநாட்டை அடைவது. இந்தியாவின் நேரடியான தலையீட்டைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய பிரதான இயக்கங்கள் அனைத்தும் தனிநாட்டுக்கான ஆயுத விடுதலைப் போராட்டத்தின் மூலமும் தனிநாட்டை அடைய முடியாதென்னும் நிலைப்பாட்டிற்கு வந்தன. ஏனெனில், இந்தியா தனிநாட்டை ஆதரிக்காது என்பது தெளிவாகத் தெரிந்துவிட்டது. விடுதலைப் புலிகள் மட்டுமே தனிநாட்டை ஆயுத பலம் கொண்டு தங்களால் அடைய முடியுமென்னும் நம்பிக்கையுடன் செயல் பட்டனர். 2009உடன் அதுவும் முடிவுக்கு வந்தது.

இப்போது ஜனநாயகவாதிகளும் தோல்வியடைந்திருக்கின்றனர். ஆயுத விடுதலை அமைப்புக்களும் தோல்வியடைந்திருக்கின்றனர். இரண்டு தோல்வி அனுபவங்களின் வழியாக அரசியலை விளங்கிக்கொள்ளும் அனுபவம் ஈழத் தமிழர்களுக்கு கிடைத்திருக்கின்றது. இதனைக் கொண்டு தமிழ்த் தேசிய தரப்புக்களால் ஆக்கபூர்வமாக சிந்திக்க முடிகின்றதா? எதிர் காலத்தை வரையறுக்க விரும்பினால் கடந்த காலத்தை படி - என்றொரு கூற்றுண்டு. ஈழத் தமிழர்களின் கடந்த காலம் தெளிவான படிப்பினைகளை தந்திருக்கின்றது. இந்த படிப்பினைகளிலிருந்து சிந்தித்தால், அரசியல் தீர்வு தொடர்பில் முரண்பட வேண்டியதில்லை. அது தொடர்பில் தாங்களும் குழம்பி மக்களையும் குழப்ப வேண்டியதில்லை. ஏனெனில், அரசியல் தீர்வு தொடர்பில் - யார் புனிதர்களென்னும் விவாதத்தை தூண்ட முற்படும் எவரிடமும் தாங்கள் கூறுவதை அடையும் வழிமுறைகள் இல்லை. ஒரு விடயத்தை அடைவதற்கான வழிமுறைகள் தெரியாத போது, மற்றவர்கள் தவறான வழியில் செல்வதான விவாதங்கள் பயனற்றவை.தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் என்போர் இதனை தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் தேசிய அரசியல் நோக்கம் கொண்டவர்களாக தங்களை காண்பிக்க முயற்சிக்கும் சிவில் சமூகங்களும் இதனை தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். புரிந்து கொண்டால் அதிக முரண்பாடுகளை தவிர்க்கலாம். ஒவ்வொருவரும் அவர்களின் பாதையில் மற்றவர்களோடு முட்டுப்படாமல், மற்றவர்களுக்கு முகவர் பட்டம் சூட்டாமல் பயணம் செய்ய முடியும். இன்றைய சூழலில் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை அடைவதற்கான தெளிவான வழிமுறைகள் இல்லை. அதேவேளை எந்த வொரு வெளிநாட்டு தரப்பும் ஈழத் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுக்காக, சிங்களவர்களின் குரல் வளையை நசுக்கப் போவதில்லை. இதுதான் யதார்த்தம்.

ஒருவேளை, பல வருடங்களுக்கு பின்னர் சில வாய்ப்புக்கள் வரலாம். ஆனால், அதுவரைக்கும் ஈழத் தமிழர்கள் ஓர் இனமாக வடக்கு, கிழக்கில் வாழ்வது முக்கியம். அதற்கான ஏற்பாடுகளை தக்கவைப்பது தொடர்பில் சிந்தித்து செயல்படுவதுதான் இப்போது தமிழ் தேசிய தரப்புக்கள் செய்ய வேண்டியது. பொறுப்புக்கூறல் தொடர்பான அழுத்தங்கள் என்று கூறப் படுபவைகளால், அரசியல் தீர்வு கிடைக்கப் போவதில்லை. ஒருவேளை அவ்வாறு எவரேனும் நம்பினால் பொறுப்பு கூறல் எப்போது நிகழும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. அதுவரைக்கும் ஒரு சிறிய இனமான, ஈழத் தமிழர்களால் தங்களைத் தற்காத்து கொள்ள முடியுமா? எவ்வாறு? கடந்த பன்னிரெண்டு வருடங்கள், பொறுப்புக் கூறல் தொடர்பான சர்வதேச அழுத்தங்களின் பலவீனத்தை நமக்கு உணர்த்தியிருக் கின்றது.

'நல்லாட்சி நாயகருக்கு' தண்டனை வழங்க கோரிக்கை!

அலசுவது இராஜதந்திரி

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தின குண்டு தாக்குதலை தடுக்கத்தவறியமை மற்றும் ஏககாலத்தில் மூன்று இடங்களில் உயிர்த்த ஞாயிறு தினத்தில் குண்டு வெடிப் புகள் இடம்பெற்று 269 பேர் கொல் லப்பட்டமை குறித்து எவ்வித சட்ட நடவடிக்கை யையும் எடுக்கத் தவறிய அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனமீது சட்ட நட வடிக்கை எடுத்து தண்டனை வழங்குவதே பொருத்தமானதென அருட் தந்தை ஜூட் கிரிஷாந்த் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் குற்றவியல் திணைக் களத்தால் விசாரணைக்கு அழைக்கப்பட்டி ருந்த அருட்தந்தை ஜூட் கிரிஷாந்தவிடம் மூன்று மணித்தியாலங்கள் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டிருந்தது.

இதன்பின்னர் அவர் ஊடகத்துறையினரை சந்தித்தபோதே முன்னாள் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன 2019ஆம் ஆண்டு இடம் பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலு டன் தொடர்புடையவர் எனக் குறிப்பிட்ட தோடு அவர்மீது சட்ட நடவடிக்கை எடுத்து தண்டனை வழங்கப்பட வேண்டும் என அருட் தந்தை ஜூட் கிரிஷாந்த் குறிப்பிட்டுள் ளார்.

குற்றவியல் திணைக்களத்தால் விசார ணைக்கு அழைக்கப்பட்ட நிலையிலும் அருட் தந்தை ஜூட் கிரிஷாந்த் துணிச்சலோடு தமது மனதில் பட்டதை அச்சமின்றித் தெரிவித் துள்ளார். இந்தத் துணிச்சல் அவரின் ஆன்மீக பலத்தையே காண்பித்திருந்தது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவை பொறுத்தவரை அவர் "அப்பம் தின்ற வானரம்" என்றே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் வர்ணிக்கப்பட்டிருந் தார். ஏனெனில், தமது வீட்டில் இடம்பெற்ற விருந்துபசரமொன்றில் பங்குபற்றி அங்கே பரி மாறப்பட்ட அப்பம் உணவை நன்கு ருசிபார்த்தவிட்டு மறுநாள் தமது அரசையே கவிழ்த்துவிடும் நடவடிக்கையில் மைத்திரி பால சிறிசேன இறங்கியிருந்தார் என்று மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டிருந்தார்.

மைத்திரிபால சிறிசேன ஓர் அரசைக் கவிழ்க்குமளவுக்கோ அல்லது தன்னை ஜனாதி பதி ஆக்குமளவுக்கோ அரசியல் மதியூகம் படைத்தவராக இருக்கவில்லை. அவரை நல்லாட்சி என்ற பதாகையின் கீழ் பதவிக்கு கொண்டுவந்ததே தமிழ்த் தேசிய கூட்ட மைப்பு என்பது குறிப்பிடத்தக்கது. அன்று நல்லாட்சி என்ற ரீதியில் நல்லிணக்கத்துடன் அரசியல் தீர்வுகளை எட்டக்கூடிய ஓர் ஆட்சியை ஏற்படுத்துவதே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் எதிர்பார்ப்பாக இருந்தது.

ஆனால், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஏற்படுத்திக்கொடுத்த நேர்த்தியான பாதை யில் செல்லாது தமது ஜனாதிபதி பதவியைக் கூட துஷ்பிரயோகம் செய்து பாராளுமன்ற நடைமுறைக்கு சவால் விட்டவரே அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்பது குறிப்பிடத்தக்கது.

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல் இடம்பெற்றபோது பாதுகாப்புத் துறையின் அனைத்து பிரிவுகளுக்கும் பொறுப்பான நிறைவேற்றதிகார ஜனாதிபதி யாகவே மைத்திரிபால சிறிசேன விளங்கியி ருந்தார். இந்நிலையில், அவருக்கு தெரியாது ஓர் அணுகூட அசைய முடியாது என்ற நிலையே காணப்பட்டிருந்தது.

ஆனால், உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புகள் ஓர் இடத்தில் மட்டுமல்ல. கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயம், நீர்கொழும்பிலுள்ள தேவாலயம், மட்டக் களப்பிலுள்ள தேவாலயம் என்று ஏககாலத் தில் மூன்று இடங்களில் குண்டுவெடிப்புகள் இடம்பெற்றிருந்தன.

இதன்காரணமாகவே நல்லாட்சி என்று ஜனாதிபதி பதவிக்கு வந்தவர் நாட்டின் பாது காப்புக்கே பெரும் அச்சுறுத்தலாக விளங்கிய உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலை தடுக் கத் தவறியிருந்தார் என்ற ரீதியில் அருட் தந்தை ஜூட் கிரிஷாந்த் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டுமென தெரிவித்துள் ளார். கூடவே, மைத்திரிபால சிறிசேனவுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டுமெனவும் அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த் தெரிவித்துள் ளார்.

எனவே, ஐக்கிய நாடுகள் ஸ்தாபன மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத் தொடர் இடம்பெறவுள்ள நிலையில் இலங் கையின் கத்தோலிக்க திருச்சபை அசாதரண துணிச்சலோடு தனது குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளது. உயிர்த்த ஞாயிறு குறித்து அமைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு கூட பரிபூரண விசாரணைக்கு சிபார்சு செய்துள்ளது.

எனவே, நல்லாட்சி என்ற சுலோகத்துடன் வடக்கு - கிழக்கு மக்களின் ஆதரவோடு பதவிக்கு வந்த மைத்திரிபால சிறிசேன தென் னிலங்கை மக்களாலேயே ஒரு குற்றவாளியாக காணப்பட்டுள்ளமையே விசித்திரமான போக் கில் நாட்டின் அரசியல் இருப்பதை அறிய முடிகின்றது.

அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



தமிழகத்தில் உள்ளாட்சி தேர்தல் இன்று பாதுகாப்புக்கு ஒரு லட்சம் பொலிஸார்!

சென்னை, பெப் 19,

தமிழகத்தில் நகர்ப்புற உள் ளாட்சித் தேர்தலுக்கான வாக் குப்பதிவு இன்று நடை பெற வுள்ள நிலையில் தமிழகம் முழு வதும் ஒரு லட்சத்துக்கும் அதிக மான பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடவுள்ளனர்.

வாக்குப் பதிவுக்கான நட வடிக்கைகளில் தேர்தல் ஆணை யம் தீவிரம் காட்டி வருகிறது. 1,06,121 மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களும், 55,337 கட்டுப்பாட்டுக் கருவிகளும் இந்தத் தேர்தலில் பயன்படுத் தப்பட உள்ளன. 31,150 வாக்குச்சாவடிகள் தயார் நிலை யில் உள்ளன.

ஒரு வாக்குச்சாவடிக்கு 4 வாக்குப்பதிவு அலுவலர்கள் வீதம் ஏறத்தாழ 1.40 லட்சம் பணியாளர்கள் தேர்தல் பணி யில் ஈடுபடுத்தப்பட உள்ள னர்.

இந்த நிலையில் தேர்தல் பாதுகாப்பு தொடர்பாகத் தமிழக டிஜஜி சைலேந்திரபாபு, "நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் நியாயமான முறையில் வெளிப் படையாகவும், அமைதியாக வும் நடைபெற, 1,343 நிலைக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. தேர்தல் தொடர்பான பிரச் சினைகள் நிலவும் பகுதிகளுக்கு விரைந்து சென்று தீர்வு காணும் வகையில் 846 அதிரடிப்படை கள் அமைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

ஸ்டாலின் சுய சரிதை வெளியீட்டு விழா; தமிழகத்துக்கு வருகிறார் ராகுல் காந்தி!

சென்னை, பெப் 19,

முதல்வர் ஸ்டாலினின் சுய சரிதை நூலான 'உங்களில் ஒரு வன்' வெளியீட்டு விழாவில் பங்கேற்க ராகுல்காந்தி தமிழ கம் வரவுள்ளதாக தகவல் வெளி யாகியுள்ளது.

பெப்ரவரி 28ம் தேதி சென்னை நந்தம்பாக்கம் வர்த் தக மையத்தில் 'உங்களில் ஒரு வன்' நூல் வெளியீட்டு விழா நடைபெற உள்ளது. இந்த விழாவில் காங்கிரஸ் எம்.பி., ராகுல்காந்தி பங்கேற்பார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், சமூக நீதி கூட்ட மைப்பில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்ட திரிணாமூல் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சி களுக்கும் இந்த விழாவில் பங் கேற்க அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது.

தேசிய அளவிலான தலை வர்களும் இந்த நூல் வெளி யீட்டு விழாவில் பங்கேற்கவுள் ளனர். புத்தக விழாவில் பங்கேற் கும் தலைவர்களுடன் தேசிய அளவிலான ஒரு கூட்ட மைப்பை ஏற்படுத்துவதற்கான ஆலோசனைக் கூட்டம் நடை பெறும் என, எதிர்பார்க்கப்படு கிறது.

இது தவிர பல்வேறு விஷ யங்கள் குறித்தும் ஆலோசனை நடைபெறும் எனவும் எதிர் பார்க்கப்படுகிறது.

தமிழகத்தின் பாதுகாப்பில் எந்தவித சமரசத்துக்கும் இடமளிக்கக் கூடாது

அரசை வலியுறுத்துகிறார் அன்புமணி ராமதாஸ்

சென்னை, பெப் 19,

"கூடங்குளம் அணு உலையை விட தமிழக மக்களின் பாது காப்புதான் அரசுக்கு முக்கிய மாகும். அதில் எந்த சமரசத்தை யும் அரசு செய்து கொள்ளக் கூடாது" என பா.ம.க. இளை ஞர் அணித்தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் எம்.பி. வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் கூறி யிருப்பதாவது: -

கூடங்குளத்தில் 3 மற்றும் 4ஆவது அணு உலைகளின் அணுக்கழிவுகளை அங்கேயே சேமித்து வைப்பதற்கான பாதாள கட்டமைப்பை ஏற்படுத்துவ தற்கு எதிர்ப்பு எழுந்துள்ளது.

இந்தநிலையில், அதுகுறித்து தமிழக அரசுடன் பேச தேசிய அணுமின்கழகத் தலைவர் புவன் சந்திரபதக் அடுத்த வாரம் சென்னை வருவதாக தெரிகிறது. கூடங்குளம் அணுக் கழிவு பாதாள கட்டமைப்புக்கு எழுந்துள்ள எதிர்ப்புகளை முறி யடிக்க வேண்டும், பணிகளுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று தமிழக அரசை வலியுறுத்துவ துதான் அவரது பயணத்தின் நோக்கமாகும்.

இது தொடர்பான அழுத் தங்களுக்கு தமிழக அரசு பணி யக்கூடாது. கூடங்குளத்தில் அணுக்கழிவு பாதாள கட்ட மைப்பை ஏற்படுத்தினால், அது தென் தமிழகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று கூறி முதன் முதலில் எதிர்ப்பு தெரிவித்தது பா.ம.க. தான். அதன் பின்னர் அணுக்கழிவு கட்டமைப்புக்கான எதிர்ப்பு அதிகரித்திருக்கிறது.

கூடங்குளம் அணு உலையை விட தமிழக மக்களின் பாது காப்புதான் அரசுக்கு முக்கிய மாகும். அதில் எந்த சமரசத் தையும் அரசு செய்து கொள்ளக் கூடாது. தமிழகத்தின் பாது காப்புக்கு அச்சுறுத்தலை ஏற் படுத்தக்கூடிய எந்தத் திட் டத்தையும் தமிழக அரசு அனு மதிக்கக்கூடாது" எனத் தெரி வித்துள்ளார்.

சென்னையில் விமான சேவை அதிகரிப்பு

சென்னை, பெப் 19,

தமிழகத்தில் கொரோனா தொற்று குறைந்துள்ளதால் சென்னை விமான நிலையத்தில் விமான சேவைகள் அதிகரிக்கப் பட்டுள்ளன.

தமிழகத்தில் கொரோனா தொற்று மூன்றாவது அலை பர வல் தீவிரமாக இருந்ததால், சென்னை விமான நிலையத்தில் பயணிகளின் எண்ணிக்கை வெகு வாக குறைந்தது. டிசெம்பர் மாதத்தில் தினமும் 180 உள் நாட்டு விமானங்கள் இயக்கப் பட்டன. பயணிகளின் எண் ணிக்கை 34 ஆயிரத்துக்கும் அதிகமாக இருந்தது. தொற்று மூன்றாவது அலையால் ஜனவரி மாதத்தில் பயணிகளின் எண் ணிக்கை 10 ஆயிரமாகவும், விமானங்களின் இயக்கம் 100 என்ற அளவில் இருந்தது.

இந்நிலையில் தொற்று பரவல் அதிகரித்த வேகத்தில் குறைந்து வருவதால், பல்வேறு தளர்வுகளை தமிழக அரசு அறி வித்துள்ளது. கொரோனா பரி சோதனை, தடுப்பூசி சான்றிதழ் கட்டாயம், 7 நாட்கள் தனி மைப்படுத்துதல் போன்றவை களும் விலக்கிக் கொள்ளப்பட் டுள்ளன. அதனால், பயணிகளின் எண்ணிக்கை மீண் டும் 20 ஆயிரத்தை கடந் துள்ளது. விமானங்கள் இயக் கமும் அதிகரித்துள்ளது.

அதேபோல், சர்வதேச விமான சேவைகளுக்கு கட்டுப் பாடுகள் இருந்ததால், குறிப் பிட்ட நாட்களில் சிறப்பு விமானங்கள் மட்டும் இயக் கப்பட்டு வந்தன. இப்போது, சிறப்பு விமானங்களின் இயக்கமும் அதிகரிக்கப்பட்டுள் ளது.

நீதித்துறை பிரமுகர்களுக்கு வெளிநாட்டு விஸா மறுப்பு

அதிர்ச்சியில் அரச மேலிடம்

கொழும்பு, பெப். 19

இலங்கை நீதித்துறையில் அங்கம் வகிக்கும் உயர்மட்ட பிரமுகர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு வெளிநாடுகளுக்கு பயணம் செய்வதற்கான விஸாவை வழங்குவதில் கொழும்பிலுள்ள சில தூதரகங்கள் மறுப்பை வெளியிட்டுள்ளதாக உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே இறுதிப் போர்க் களத்தில் செயற்பட்ட முன் னிலை இராணுவ அதிகாரிகள் மற்றும் அவர்களின் நெருங்கிய உறவினர்கள் வெளிநாடு செல்ல அனுமதியளிக்கும் விஸாவை வழங்க அந்த நாடுகள் மறுதலித் திருக்கும் நிலையில், இப்போது நீதித்துறையின் முக்கிய பிர முகர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு விஸா வழங்குவதை சில நாடு கள் மறுதலித்திருப்பது அரச மேலிடத்துக்கு அதிர்ச்சியை கொடுத்திருப்பதாக அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

அண்மைக்காலமாக நீதித் துறையின் சில செயற்பாடுகள் காரணமாகவே இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெ டுக்க சில நாடுகள் தீர்மானித் துள்ளதாக அறிகிறோம். இது நாட்டுக்கு ஆரோக்கியமான தல்ல. ஜெனிவா மனித உரிமை கள் பேரவை கூட்டம் நடக்க வுள்ள நிலையில், இப்படியான செயற்பாடுகள் இடம்பெறுவது சிறந்த சகுனங்கள் அல்ல. இராணுவ அதிகாரிகளின் மீதான தடைகளுக்கு பிறகு இப்போது புதிய தடைகள் வந்துகொண்டிருக்கின்றன. நீதித்துறையின் உயர்மட்ட பிர முகர்கள் பலரின் பிள்ளைகள் விண்ணப்பித்த கற்கைகளுக் கான விஸாக்கள் நிராகரிக்கப் பட்டுள்ளன என்று அரசின் உயர்மட்ட பிரதிநிதியொருவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

நிர்ணய விலையில் மஞ்சள் கொள்முதல்

கொழும்பு, பெப். 19

நாடு முழுவதுமுள்ள மஞ்சள் செய்கையாளர்களிடமிருந்து நிர்ணய விலையில் மஞ்சள் கிழங்கு கொள்முதல் செய்யும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதி விவசாயத் திணைக் களம் மற்றும் இலங்கை வாச னைத் திரவியங்கள் சந்தைப் படுத்தல்சபை என்பன இணைந்து இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக கைத்தொழில் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு தெரிவித் துள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் இது வரை கம்பஹா, கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்ட செய்கையாளர்களிடமிருந்து ஒரு இலட்சம் கிலோகிராம் மஞ்சள் கொள்வனவு செய்யப் பட்டுள்ளது.

ஒரு கிலோகிராம் மஞ்சள் கிழங்கு 165 ரூபாவுக்கு கொள் வனவு செய்யப்பட்டதாக கைத் தொழில் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

சுற்றுலாப் பயணிகளுக்காக அதிசொகுசு ரயில் சேவைகள்

கொழும்பு, பெப். 19

உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு சுற்றுலாப் பயணிக ளுக்காக புதிய அதிசொகுசு விசேட ரயில்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு தீர்மானிக் கப்பட்டுள்ளது.

ரயில் திணைக்கள பொது முகாமையாளர் இதனைத் தெரி வித்தார்.

அதன்படி முதலாவது ரயில் எதிர்வரும் மார்ச் மாதத்திலி ருந்து கண்டி மற்றும் எல்ல ஆகிய இடங்களுக்கு சேவையை தொடங்கவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

மன்னாரில் மேலும் 23 பேருக்கு தொற்று

கடந்த 17 நாட்களில் 400 பேருக்கு கொரோனா

மன்னார், பெப். 19

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை மேலும் புதிதாக 23 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் கடந்த 17 நாட்களில் 400 கொரோனா தொற்றாளர் கள் அடையாளம் காணப்பட் டுள்ளனர் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி. வினோதன் தெரிவித்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை விடுத்துள்ள கொரோனா நில வர அறிக்கையில் அவர் இத னைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அதில் மேலும் தெரி விக்கையில்-

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை மேலும் புதிதாக 23

கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள னர். பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி வரை 400 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள னர்.

இந்த வருடம் 601 தொற்றா ளர்களும், மாவட்டத்தில் தற் போது வரை 3784 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களில் 39 கொரோனா மரணங்களும் நிகழ்ந்துள்ளது- என்று கூறியுள்ளார். (அ)

ரயில் தடம்புரள்வு

கொழும்பு, பெப். 18

கொழும்பு கோட்டையிலி ருந்து பிரதான மார்க்கத்தில் பயணிக்கும் ரயில் சேவைகளில் நேற்றுக் காலை தாமதம் ஏற்பட் டது.

ரயில் கட்டுப்பாட்டுப் பிரிவு இந்த விடயத்தை தெரிவித்தது.

ரயில் ஒன்று வெயங்கொடை பகுதியில் தடம் புரண்டதன் காரணமாகவே இவ்வாறு குறித்த மார்க்கத்தின் போக்கு வரத்து நடவடிக்கைகளில் தாம தம் ஏற்பட்டதாகவும் ரயில்வே கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவித் தது. (அ)

தங்காலையில் தாக்குதல் கான்ஸ்டபிள் உயிரிழப்பு

கொழும்பு, பெப். 19

தங்காலையில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் தாக்குத லுக்கு இலக்காகி ஒருவர் உயிரி ழந்துள்ளார் என தெரிவிக்கப் படுகிறது.

அறிக்கை ஒன்றை வெளி யிட்டு பொலிஸ் ஊடகப்பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

விராந்தெனிய பிரதேசத் தைச் சேர்ந்த 34 வயதுடைய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒரு வரே இவ்வாறு உயிரிழந்துள் ளார் என பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (அ)

எரிபொருள் விலை உயரும்வரை மட்டுப்படுத்தப்பட்ட விநியோகம்

கொழும்பு, பெப். 19

எரிபொருள் விலை அதி கரிக்கப்படும் வரை எரிபொருள் விநியோகம் மட்டுப்படுத்தப் பட்டுள்ளதாக இலங்கை பெற் றோலியக் கூட்டுத்தாபன தேசிய ஊழியர் சங்கத்தின் தலைவர் ஆனந்த பாலித தெரி வித்துள்ளார்.

இதன் காரணமாக நாட ளாவிய ரீதியில் உள்ள சில எரி பொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற் பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

எவ்வாறாயினும், நாட்டில் தற்போது எரிபொருள் தட்டுப் பாடு இல்லை எனவும், பெற் றோலிய கூட்டுத்தாபனத்துக்கு தேவையான எரிபொருள் கையிருப்பு உள்ளதாகவும் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். (அ)

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ரயில் பெட்டிகள் ஆய்வு செய்யப்படவில்லை!

கொழும்பு, பெப். 19

இந்தியாவில் இருந்து இறக் குமதி செய்யப்பட்ட இயந்திரங் கள் மற்றும் பெட்டிகளை உள் ளூர் அதிகாரிகள் ஆய்வு செய்ய தவறியதாக முன்னாள் போக்கு வரத்து இராஜாங்க அமைச்சர் அசோக அபேசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

2018 ஆம் ஆண்டு நல் லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் பெட்டிகளுக்கான கட்டளைகள் வழங்கப்பட்ட போதிலும், 2020 ஆம் ஆண்டி லேயே அவை இறக்குமதி செய் யப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் அபேசிங்க கூறினார்.

அந்த நேரத்தில் கொரோனா வைரஸ் நிலைமை காரணமாக, இறக்குமதி செய்வதற்கு முன் னர் வண்டிகளை பரிசோதிக்க உள்ளூர் அதிகாரிகளால் இந்தி யாவுக்கு வர முடியவில்லை என்று அபேசிங்க மேலும் கூறி னார்.

இறக்குமதி செயல்முறை நீண்டது மற்றும் செலவையும் உள்ளடக்கியது என்று அவர் கூறினார், கட்டளை செய்யப் பட்ட நேரத்தில், பொறிய லாளர்கள் ரயில் பெட்டிகள் மற்றும் இயந்திரங்களைக் கண்காணிக்க இந்தியாவுக்கு சென்றனர்.

எவ்வாறாயினும், பொருட் களை இறக்குமதி செய்வதற்கு முன், மற்றொரு குழு இந்தியா வுக்கு செல்லவேண்டும் என்று கூறிய அவர், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை, தற்போது பெட்டிகள் மற்றும் இயந்திரங்களில் தவறு இருப்ப தாக குற்றச்சாட்டுகள் சுமத்தப் படுகின்றன-என்றார். (அ)

1.2 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை இந்த ஆண்டில் நாட்டுக்கு ஈர்க்க திட்டம்

கொழும்பு, பெப். 19

இவ்வாண்டில் நாடளாவிய ரீதியில் 25 சுற்றுலாக் கிராமங் களை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவித்த சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, ஒவ்வொரு திட்டத்துக்கும் 10 மில்லியன் ரூபாய் செலவிடப்படும் என வும் தெரிவித்துள்ளார்.

மேலும், 2022ஆம் ஆண் டில் குறைந்தது 1.2 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை நாட் டுக்கு ஈர்க்க திட்டமிடப்பட் டுள்ளதாகவும் அமைச்சர் கூறி னார். (அ)

விடுவிக்கப்பட்ட 47 இந்திய மீனவர்கள் நேற்று சென்னைக்கு அனுப்பிவைப்பு

கொழும்பு, பெப். 19

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி ஊடுருவிய குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டு இலங்கையில் தடுத்து வைக் கப்பட்டிருந்த 47 இந்திய மீனவர் கள் நேற்று காலை சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர் களே இவ்வாறு விமானம் மூலம் நேற்று சென்னைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இந்தத் தகவலை இலங்கைக் கான இந்தியத் தூதரகம் நேற்று காலை தனது ருவிட்டர் தளத் தில் வெளியிட்டது. (அ)

பயங்கரவாத சட்டத்தை நீக்குமாறு கோரி யாழில் மதத் தலைவர்களும் கையெழுத்து!

யாழ்ப்பாணம், பெப். 19

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்கக் கோரும் கடிதத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள சமயத் தலைவர்கள் கைச்சாத்திட்டனர்.

நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாச்சார்ய சுவாமிகள், யாழ். மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, தென்னிந்திய திருச்சபையின் பேராயர் கலாநிதி டானியல் தியாகராஜா, யாழ். மாவட்ட ஜமையத்துல் உலமா தலைவர் அல் ஹச் அப்துல் அஸீஸ் ஆகியோர் இதில் கைச்சாத்திட்டனர்.

(அ)

மன வருத்தத்தில் நிமால் லான்ஸா!

அமைச்சுக்கு செல்லாதிருக்க முடிவு

கொழும்பு, பெப். 19

தாம் மிகுந்த மன வருத்தத்தில் இருப்பதாகவும், மீண்டும் அமைச்சுக்குச் செல்லும் உத்தேசமில்லை எனவும் ராஜாங்க அமைச்சர் நிமால் லான்ஸா தெரிவித்தார்.

சிங்கள தொலைக்காட்சி சேவையொன்றிடம் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்த பின் தனது மன வேதனை குறித்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அமைச்சிலிருந்து பொருட்களை அகற்றிக்கொண்டதாக வெளியாகும் தகவல்கள் உண்மையானவை. அமைச்சுக்கு

மீண்டும் செல்லும் உத்தேசமில்லை.

இதேவேளை, அமைச்சின் செயலாளருடன் கோபித்துக் கொண்டு இவ்வாறு பொருட்களை மூட்டைக் கட்டிக் கொண்டு அமைச்சை விட்டு வெளியேறுவது அரசியல் வாதிக்குப் பொருத்தமானதல்ல. சிறுபிள்ளைத்தனமானது- என்றார். (அ)

அமைச்சரோடு மோதிய செயலருக்கு இடமாற்றம்?

கொழும்பு, பெப். 19

இராஜாங்க அமைச்சர் நிமல் லான்ஸாவுடன் ஏற்பட்ட மோதலை தொடர்ந்து, அந்த அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ரஞ்சித் திஸாநாயக்கவுக்கு இடமாற்றம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து அரசு உயர் அதிகாரிகள் அவரிடம் விசாரித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர் வேறொரு இராஜாங்க அமைச்சு அல்லது வேறு அரச நிறுவனத்தில் உயர் பதவியில் நியமிக்கப்பட வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இராஜாங்க அமைச்சர் நிமல் லான்ஸா, அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ரஞ்சித் திஸாநாயக்கவுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அமைச்சின் தனிப்பட்ட ஊழியர்களை அண்மையில் நீக்கினார்.

நேற்று முன்தினம் அமைச்சின் ஊழியர்கள் அமைச்சில் இருக்கவில்லை எனத் தகவல்கள் தெரிவித்தன. (அ)

இம்முறை உயர்தரப் பரீட்சை முறைகேடுகள் மிகக்குறைவு

கொழும்பு, பெப். 19

கடந்த முறையுடன் ஒப்பிடுகையில் இம்முறை கல்விப் பொதுதராதர உயர்தரப் பரீட்சையில் முறைகேடுகள் குறைவாக உள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இம்முறை இரண்டு முறைகேடுகள் மட்டுமே பதிவானதாக அது குறிப்பிட்டுள்ளது.

பரீட்சை வினாத்தாள்களை விநியோகிப்பதற்கும் தாள்களை பூர்த்தி செய்வதற்கு வழங்கப்பட்ட நேரத்தை கண்காணிப்பதற்கும் நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய தொழில்நுட்ப முறைகள் வெற்றியடைந்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன தெரிவித்தார்.

வலயப் பிரிவுகளின் கண்காணிப்பும் இதுவரை வெற்றியளித்துள்ளதாக ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

(அ)

ஒன்லைனில் ரயில் பயணச்சீட்டு நேற்று முதல் முற்பதிவு ஆரம்பம்

கொழும்பு, பெப். 19

பயணிகளுக்கு சிறந்த சேவையை வழங்கும் நோக்கில் நேற்று முதல் ஒன்லைனில் புகையிரத பயணச்சீட்டுகளை வழங்க இலங்கை ரயில் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கை ரயில் திணைக்களபொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர, பயணிகள் இணையத்தில் பயணச்சீட்டை முன்பதிவு செய்ய முடியும் அல்லது கையடக்க தொலைபேசி செயலி ஊடாக ஆசனத்தை முன்பதிவு செய்ய முடியும் என தெரிவித்தார்.

இந்த மொபைல் அப்ளிகேஷன் விரைவில் பதிவிறக்கம் செய்யப்படும் என்றும் ஜெயசுந்தர கூறினார்.

இந்த வேலைத்திட்டம் ஆரம்ப கட்டமாக நேற்று முன்னெடுக்கப்படும் எனவும், பயணிகளின் தேவைக்கு ஏற்ப எதிர்காலத்தில் இந்த வசதி கிடைக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சேவையை சீரமைக்க ஆரம்ப கட்டத்தில் தரவுகளை சேகரிப்போம். மொபைல் அப்ளிகேஷன்களின் அண்ட் ரொய்ட் மற்றும் ஐ.ஒ.எஸ் பதிப்புகள் விரைவில் கிடைக்கும். பயணிகள் கிரெடிட் கார்ட்களைப் பயன்படுத்தியும் பணம் செலுத்த முடியும் என்றும் ஜெயசுந்தர கூறினார்.

(அ)

டக்ளஸ் பாவப்பட்ட அமைச்சர்!

கூறுகிறார் சுமந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், பெப். 19

தனக்கு எதிரான போராட்டத்தைத் தானே ஒழுங்கமைத்ததாக சொல்லும் ஒரே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவே என பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தினருடன் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அவர் பாவம் அவருக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுவதை அவரால் பொறுக்க முடியாமல் அவர் ஏதேதோ பிதற்றிக் கொண்டிருக்கிறார்.

அதற்கெல்லாம் நாங்கள் பதில் சொல்லி அவருக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை. மக்கள் ஏன் போராடினார்கள் என்பது மக்களுக்கு தெரியும்.

மக்களுடைய பிரதிநிதிகளாக நாங்கள் மக்களுடன் சேர்ந்துதான் போராடினோமோ தவிர நாங்கள் போராட்டங்களை ஒழுங்கமைக்கவில்லை. இது முற்றுமுழுதாக மக்களுடைய போராட்டங்களாக நடந்தன.

நாங்கள் மக்களுடன் கூட நின்றோம். தனக்கு எதிரான போராட்டத்தை தானே ஒழுங்கமைத்ததாக சொல்லும் ஒரே

அமைச்சர் இவர். அவர் இன்றைக்கு இப்படி சொல்லுவார், நாளை வேறொன்றை சொல்லுவார், அவற்றை எல்லாம் முக்கிய விடயமாக எடுத்து கொள்ளக்கூடாது- என்றார்.

இந்த சந்திப்பில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கேசவன் சயந்தன், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் ச.அரியகுமார் உள்ளிட்ட வர்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

தடுப்பூசி வேலைத்திட்டத்தை ஏப். 30 நிறைவு செய்யும் தீர்மானம் இல்லை

கொழும்பு, பெப். 19

தடுப்பூசி வேலைத்திட்டத்தை ஏப்ரல் 30ஆம் திகதியின் பின்னர் நிறைவு செய்வதற்கு இதுவரை தீர்மானம் எடுக்கவில்லை என பிரதி சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், சுகாதார பிரிவுகளில் இத்திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது சமூகத்தில் காணப்படும் டெங்கு மற்றும் வைரஸ் காய்ச்சல் ஆகிய நோய்கள் குறித்து அச்சம் ஏற்படுமாயின், அவை தொடர்பாக உடனடியாக பரிசோதித்து உறுதிப்படுத்த வேண்டும். அதனை அலட்சியப்படுத்தி, சுகாதார பழக்கவழக்கங்களை கைவிடக்கூடாது எனவும் பிரதி சுகாதார பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் வலியுறுத்தினார்.

(அ)

125 சாராய போத்தல்களுடன் காரைநகரில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 19

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காரைநகர் - களபூமி பகுதியில் 125 கால் சாராயப் போத்தல்களுடன் 64 வயதுடைய ஒருவர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டார்.

இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் சித்தங்கேணி மதுவரி நிலையத்தினர் இணைந்து இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.

குறித்த நபர் வீட்டில் வைத்து சாராயம் விற்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர் தற்போது சித்தங்கேணி மதுவரி நிலையத்தினரின் கண்காணிப்பின் கீழ் உள்ளார். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளார் என தெரிவிக்கப்பட்டது.

(அ-03)

பயங்கரவாத சட்டத்தை ரத்து செய்யவேண்டும்!

மன்னிப்புச் சபை மீண்டும் வலியுறுத்து

கொழும்பு, பெப். 19

பயங்கரவாத தடைச் சட்டத்தை ரத்து செய்யுமாறு சர்வதேச மன்னிப்புச் சபை மீண்டும் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

தற்காலிக அடிப்படையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் நிறைவேற்றப்பட்டு நாற்பத்து மூன்று ஆண்டுகள் கடந்துள்ளதாக அது சுட்டிக்காட்டியுள்ளது.

சிறுபான்மை மக்கள், மனித உரிமை செயல்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், மாற்றுக் கருத்துக்களை வெளியிடுவோர் உள்ளிட்டோரை அடக்கு முறைக்கு உட்படுத்தவும் துன்புறுத்தவுமே இந்த சட்டத்தை இலங்கை அரசாங்கம் பயன்படுத்துகின்றது என அது மேலும் கூறியுள்ளது.

இந்த சட்டத்தில் திருத்தங்களை செய்வதாக அரசாங்கம் உறுதிமொழி வழங்கியுள்ளபோதிலும், உத்தேச திருத்தங்கள் இலங்கையின் அரசியல் சாசனத்திற்கும், சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கும் அமைவானதாக இல்லை எனவும், இந்த உத்தேச திருத்தங்களினால் மனித உரிமைகளை பாதுகாக்க முடியாது எனவும் மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது. எனவே குறித்த சட்டத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அது கோரியுள்ளது. (அ)

கோதுமை மாவுக்கு விலை நிர்ணயிக்காவிடின் பாணின் விலை 400 ரூபா வரை செல்லும் நிலை

பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 19

நாட்டில் கோதுமை மாவுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டிலுள்ள பேக்கரிகளுக்குத் தேவையான மாவில் 75 வீதம் மாத்திரமே பெறப்படுவதாகவும் அதனால் பேக்கரித் தொழில் வீழ்ச்சியடைந்து வருவதாகவும் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார்.

இதன் காரணமாக பேக்கரி உற்பத்திகள் குறைக்கப்பட்டுள்ளதாகவும், பேக்கரி உரிமையாளர்கள் அவற்றின் விலையை அதிகரிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

இன்று ஒரு இறாத்தல் பாண் 100 ரூபாவுக்கு விற்கப்பட்டாலும், எதிர்காலத்தில் அதனை 300, 400 ரூபாவுக்குக்கூட வாங்க முடியாது.

இதன் காரணமாக கோதுமை மாவுக்கான கட்டுப்பாட்டு விலையை விரைவில் அமுல்படுத்தி மாவின் விலையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தலையிடவேண்டும்-என்றார். (அ)

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக களனிதிஸ்ஸ மின் நிலையம் ஸ்தம்பிதம்

கொழும்பு, பெப். 19

எரிபொருள் தட்டுப்பாட்டினால் களனிதிஸ்ஸ மின் உற்பத்தி நிலையத்தின் நடவடிக்கைகள் ஸ்தம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான இந்த மின் உற்பத்தி நிலையத்தின் மின்சார உற்பத்தி நிறுத்தப்பட்டதனால் தேசிய ரீதியான மொத்த மின் உற்பத்தியில் 163 மெகாவோட் மின்சாரம் இழக்கப்படும் என மின் சார சபை தெரிவித்துள்ளது.

இந்த மின் உற்பத்தி நிலையத்தில் நெப்தா எனப்படும் எரிபொருளைக் கொண்டு மின்சார உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

சமுதித்தவின் வீடு மீது தாக்குதல்: கட்சி தலைவரிடமும் விசாரணை

கொழும்பு, பெப். 19

ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவின் பிலியந்தலை வீட்டின் மீது நடத்தப்பட்ட கல் மற்றும் மலக்கழிவு தாக்குதல் சம்பந்தமாக வாக்குமூலம் ஒன்றை பெறுவதற்காக எமது மக்கள் சக்தி கட்சியின் தலைவர் சமந்த பெரேராவும் நேற்று அழைக்கப்பட்டார் என பிலியந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

சமுதித்தவின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்னர், சமுதித்த, தனது வலையெளி தளத்தில் சமந்த பெரேராவுடன் நேர்காணல் நிகழ்ச்சி ஒன்றை நடத்தி இருந்தார்.

இதன்போது அத்துரலிய ரத்ன தேரர், கலகொட அத்தே ஞானசார தேரர் உள்ளிட்டோர் குறித்த முக்கியமான விடயங்கள் சம்பவங்கள் பற்றி பேசப்பட்டிருந்தது. சமுதித்தவின் பிலியந்தலை வீட்டுக்கு வாகனம் ஒன்றில் சென்ற நான்கு பேர், கடந்த 15 ஆம் திகதி இந்த தாக்குதலை நடத்தி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர். (அ)

ஆளும் தரப்பு பிரதிநிதிகள் இடையே போட்டியால் அபிவிருத்திக்கு பாதிப்பு

வலிதென்மேற்கு தவிசாளர் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 19

ஆளும் தரப்பிலுள்ள இரு மக்கள் பிரதிநிதிகளுக்கு இடையேயுள்ள போட்டித்தன்மை காரணமாக அபிவிருத்தித் திட்டங்களில் தடை ஏற்படுத்தப்படுவதுடன் உள்ளூராட்சி மன்றங்களினால் சில திட்டங்களை நடைமுறைப் படுத்தப்படமுடியாத நிலையும் காணப்படுவதாக வலிதென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் ஜெபநேசன் மற்றும் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சி மன்ற அதிகாரங்களுக்குட்பட்டு எமது பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறுபட்ட வேலைத் திட்டங்களை நாங்கள் செய்து வருகின்றோம்.

அவ்வாறான திட்டங்கள் செய்து வருகின்றபோது இன்றைய அரசாங்கத்தில் அங்கத்துவம் வகிக்கின்ற இரண்டு பிரதிநிதிகளுக்கு இடையில் உள்ள போட்டி நிலை காரணமாக பல பிரச்னைகளை நாங்கள் எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

குறிப்பாக புங்குடுதீவில் அமைக்கப்படவுள்ள ஆர்.ஓ திட்டத்தை கல்லுண்டாய் வெளிக்கு மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் அது தற்சமயம்

புங்குடுதீவிலேயே அமைக்கப்படவுள்ளதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

குறித்த விடயத்தில் புங்குடுதீவுக்கே அதனை வழங்குவதற்கான திட்டங்கள் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

ஆனால் அதனை கல்லுண்டாய்வெளிக்கு மாற்ற கலந்துரையாடப்பட்டுள்ளது. இதனால் அந்தத் திட்டத்தை எங்கு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பாக குழப்ப நிலை காணப்பட்டு இறுதியாக புங்குடுதீவுக்கே வழங்கவேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டது.

இது தேவையற்ற குழப்பமாகவே தோன்றியது. இருவருக்கு மிடையில் உள்ள போட்டித்தன்மையாலே இது உருவானது. இது மட்டுமன்றி மானிப்பாய்-காரைநகர் வீதி காப்பெற் வீதியாக புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் குறித்த வீதிகளிலுள்ள கால்வாய்கள், மதகுகள்

புனரமைக்கப்படாமலே காப்பெற் போடுவதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்ட போது எங்களாலும் பொதுமக்களாலும் குறித்த விடயம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு

மற்றும் உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டது.

இவ்வாறாக பல திட்டங்கள் முறையற்ற விதத்திலும் திட்டமிடப்படாமலும் இடம்பெற்று வருகின்றன.

இவை தொடர்பில் உரிய இடங்களுக்கு நாங்கள் முறையிட்டுள்ளோம். இதுவரை நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. நாங்கள் சிறிது காலம் பார்த்துவிட்டு ஜனநாயக ரீதியான போராட்டத்தை முன்னெடுப்பதற்கு தயாராகி வருகின்றோம் - என்றனர்.

(அ)

ஆய்வரங்கத் தொடரின் 9 ஆவது நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், பெப். 19

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் அருட்கலாநிதி நீ.மரிய சேவியர் அடிகளாரின் பன்முகப்படுத்தப்பட்ட பணிகளை ஆவணப்படுத்தும் முகமாக "கலைத்தூது நீ.மரிய சேவியர் அடிகள்: ஒரு பன்முகப் பார்வை" என்னும் தலைப்பில் மெய்நிகர் வழியில் சூம் செயலிக்கூடாக திருமறைக் கலாமன்றம் மாதந்தோறும் நடத்தி வருகின்ற ஆய்வரங்கத் தொடரின் ஒன்பதாவது நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 7.00 மணிக்கு (இலங்கை நேரம்) இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் முன்னாள் தலைவரும்,ஓய்வுநிலைப் பேராசிரியருமான கலாநிதி ஏ. என். கிருஷ்ணவேணி தலைமை யில் இடம்பெறவுள்ள இந்நிகழ் வில் "நீ.மரியசேவியர் அடிகளின் இலக்கிய நாடக எழுத்துருக்கள் மீதான பார்வை" என்னும் தலைப்பில் யாழ்.புனித சாள்ஸ் மகா வித்தியாலய ஆசிரியரும், திருமறைக் கலாமன்ற நாடகப் பொறுப்பாளருமான திருமதி வைதேகி செல்மர் எமில் ஆய்வை வழங்கவுள்ளார். ஆர்வமுள்ள அனைவரும் சூம் செயலி இலக்கம் 7893644809, கடவுச் சொல் உயிர எனபதற்கூடாக இந்நிகழ்வில் இணைந்து கொள்ள முடியும். (அ)

தமிழ்நாடு

தடுப்பூசியை கட்டாயமாக்கியமைக்கு நியூசிலாந்தில் எதிர்ப்பா?

நியூசிலாந்து சிற்சபேசன்

கொவிட் தடுப்பூசியைக் கட்டாயமாக்கியமைக்கு எதிரான ஆர்ப்பாட்டம் நியூசிலாந்தில் ஆரம்பமாகி ஒருவாரத்திற்கு மேலாகின்றது.

பெப்ரவரி முதல்வாரத்திலேயே நியூசிலாந்தின் தேசிய தினமாகும். ஐரோப்பியக் குடியேற்றவாசிகளுக்கும், நியூசிலாந்தின் பூர்வகுடிகளான மவோரி மக்களுக்குமிடையே ஏற்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை நினைவில் நிறுத்தியே, தேசியதினம் கொண்டாடப்படுகின்றது. இந்த ஆண்டிலே, ஒமைக்ரோன் பரவல் காரணமாகத் தேசிய தின நிகழ்வு நேரடியாக நடைபெறவில்லை. இணைய வழியிலேயே நடைபெற்றது. அதே காலப்பகுதியிலேயே, தடுப்பூசியைக் கட்டாயமாக்கியமைக்கு எதிரான கலகக்குரல்கள் அதிகரித்தன. அதனுடைய அடுத்த கட்டமும் ஆரம்பமாகியது.

தேசத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வாகனப் பேரணியாக, ஆர்ப்பாட்டக்காரர்கள் தலைநகர் வெலிங்டனை நோக்கிப் புறப்பட்டனர். பெப்ரவரி எட்டாம் திகதி, பாராளுமன்ற முற்றுகை ஆர்ப்பாட்டம் ஆரம்பமாகியது.

பாராளுமன்ற வளாகத்தில் தற்காலிக தங்குமிடங்கள் (டென்ட்) அமைக்கப்பட்டுள்ளன. ஆர்ப்பாட்டக்காரர்களின் வாகனங்கள் பாராளுமன்றச் சுற்றுவட்டத்திலேயுள்ள வீதிகளெங்கும் தரித்து நிற்கின்றன. அதனால் பொதுப் போக்குவரத்து பாதிக்கப்படுகின்றது. பாராளுமன்றச் சுற்றுவட்டாரத் திலே ஆர்ப்பாட்டக்காரர்களின் நடமாட்டம் 24மணிநேரமும் காணப்படுகின்றது. பொது இடங்களிலே கலாட்டா செய்கின்றனர். வீதியிலே மாஸ்க் (முகக்கவசம்) அணிந்து செல்பவர்களைக் கேலி செய்கின்றனர். முகக்கவசம் தேவையில்லை எனப் புத்திமதி சொல்கின்றனர். சாப்பாட்டுக்கடை, சூப்பர்மார்கெட் போன்ற வற்றிலே மாஸ்க் அணிய மறுக்கின்றனர். தடுப்பூசி தொடர்பான ஒழுங்குபடுத்தல்களுக்குக் கட்டுப்பட மறுக்கின்றனர். இவ்வாறாக, ஆர்ப்பாட்டக்காரர்களின் சட்டவிரோதச் செயற்பாடுகள் அதிகரிக்கின்றன.

ஆர்ப்பாட்டக்காரர்களின் சட்டவிரோதமான அணுகுமுறையை அரசு ஏற்கவில்லை. அதனால், ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேசுவதில்லை என்னும் நிலைப்பாட்டைத் திட்டவட்டமாக அறிவித்துவிட்டது. அதேவேளையில், எதிர்ப்பை வெளிப்படுத்துகின்ற ஆர்ப்பாட்டக்காரர்களின் சனநாயக உரிமையை மறுக்கப்போவதில்லை என்றும் சொல்லிவிட்டது. ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்பில் அரசின் நிலைப்பாட்டை எதிர்கட்சிகளும் ஆதரிக்கின்றன.

பாராளுமன்ற வளாகத்தை அண்டிய வெலிங்டன் நகரப் பகுதிகளிலே, பொதுமக்களின் இயல்புவாழ்கையைச் சீர்குலைக்கும் வகையிலேயே ஆர்ப்பாட்டக்காரர்களின் நடவடிக்கைகள் அமைகின்றன. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு உள்ள உரிமை என்னும் நாணயத்தின் மறுபக்கமே, ஆர்ப் பாட்டத்தில் ஈடுபடாதவர்கள் இயல்புவாழ்க்கையை வாழ்வதற்கான உரிமையாகும். அதனை ஆர்ப்பாட்டக்காரர்கள் உணர்வதாகத் தெரியவில்லை.

ஆர்ப்பாட்டக்காரர்களின் நடவடிக்கைகள் தொடர்பில் அரசின் அணுகுமுறை நிதானமானதாகவே காணப்படுகின்றது. சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்த கதையாகிவிடக் கூடாது என்பதில் அரசு கவனமாக உள்ளது. சூழ்நிலையை லாவகமாகக் கையாள்வதிலே காவல்துறை அக்கறையுடன் செயற்படுகின்றது. அதனை ஆர்ப்பாட்டக்காரர்கள் புரிந்து கொள்வதாகக் கருதமுடியவில்லை.

நியூசிலாந்தின் சனநாயக மர பிலே பொதுமக்களின் அபிப்பிராயம் முக்கியமான அம்சமாகும். பொதுமக்களின் அபிப்பிராயத்தை, சுயாதீனமான கருத்துக் கணிப்புக்கள், தோராயமாகவேனும் வெளிப்படுத்து கின்றன. தொகுதி மக்களுடன் பரந்துபட்ட தொடர்பாடலை, ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருமே கொண்டிருக்கின்றனர். அந்த வகையிலே, பொதுமக்களின் அபிப்பிராயங் களை அரசியல் கட்சிகள் தெரிந்து கொள்கின்றன. பொதுமக்களின் கருத்துக்களை அரசியல்வாதிகள் பாராளுமன்றத்தில் பிரதிபலிக்கின்றனர். இவ்வாறான வகைகளிலே, பொதுமக்களுடைய கருத்துக்களை அரசு கவனத்தில் கொள்வதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

பொதுமக்களுடைய அபிப்பிராயம் கவனத்தில் கொள்ளப்படாத வேளைகளில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன. எதிர்ப்புக்குரலுக்கான இடத்தை நியூசிலாந்தின் சனநாயக வெளி கொண்டிருக்கின்றது. எதிர்ப்பு ஆர்ப் பாட்டங்களின் மூலமாக வெளிப்படுகின்ற நியாயமான கோரிக்கைகளை அரசு கவனத்தில் கொள்கின்றது.

பொதுமக்களின் பரந்துபட்ட ஆதரவைக் கொண்டிராத அரசாட்சி ஏற்படுத்த கூடிய விளைவை அரசியல் வாதிகள் அரிச்சுவடியாகப் படிக்கின்றனர். மூன்று ஆண்டுகளுக்கொரு முறை நடைபெறுகின்ற பாராளுமன்றத் தேர்தலிலே மக்கள் தீர்ப்பு வழங்குகின்றனர். அந்தவகையிலேயே, நியூ சிலாந்தின் சனநாயக மரபு பேணப்படுகின்றது.

இத்தகைய சனநாயக மாண்புகளைக் கொண்ட சூழலிலே, ஏன் தடுப்பூசிக்கு எதிரான ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேச அரசு மறுக்கின்றது என்ற கேள்வி எழலாம். ஆர்ப்பாட்டக்காரர்களின் சட்டவிரோத அணுகுமுறையே அதற்குக் காரணமாகும் பாராளுமன்ற வளாகத்தில் அடாத்தாகத் தங்கியிருப்பது, பொதுவீதிகளை முடக்கும் வகையில் வாகனங்களை தரித்து வைப்பது உள்ளிட்டவை சட்ட விரோதமானவையாகக் கருதப்படுகின்றன. பரந்துபட்ட நியூசிலாந்து அபிப்பிராயத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதிநிதித்துவம் செய்யவில்லை என்பதுவும் கவனிப்பைப் பெறுகின்றது.

தற்போதைய பாராளுமன்ற முற்றுகை சட்ட விரோதமானது என்பதே பொதுசன அபிப்பிராயமாகும். அதனால், ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேசுவதில்லை என்னும் அரசின் முடிவைத் தேசம் ஏற்றுக்கொள்கின்றது. அதேவேளையில், ஒருதொகுதி மக்களின் ஆர்ப்பாட்டம் செய்கின்ற உரிமையையும் தேசம் அங்கீகரிக்கின்றது. அதுவே நியூசிலாந்தின் சனநாயக மாண்பாகும்.

தடுப்பூசியைக் கட்டாயமாக்கியமைக்கு எதிராகவே ஆர்ப்பாட்டம் நடைபெறுகின்றது. ஆனால், நியூசிலாந்தில் தடுப்பூசி பெறுவதற்கு தகுதியானவர்களில், 95 விழுக்காடு மக்கள் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுவிட்டனர். இரண்டாவது தடுப்பூசிக்கு மூன்று மாதங்களின் பின்னர் பூஸ்டர் என்று சொல்லக்கூடிய மூன்றாவது தடுப்பூசி வழங்கப்படுகின்றது. அதனை, 60 விழுக்காடு மக்கள் பெற்றுவிட்டனர். அந்தவகையிலே, பரந்துபட்ட நியூசிலாந்தின் தடுப்பூசி தொடர்பான நிலைப்பாடு வெள்ளிடைமலையாகும்.

அண்மைக்காலமாக தடுப்பூசிக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் வடதுருவ நாடுகளிலே அதிகரித்து வருகின்றன. அதனுடைய தொடர்ச்சியாகவே நியூசிலாந்திலும் ஆர்ப்பாட்ட மனநிலை வளர்க்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. பாராளுமன்ற முற்றுகையிலே காணப்படுகின்ற பதாதைகளும் அதனையே கோடிகாட்டுகின்றன. வடதுருவநாடுகளின் தேசியக் கொடிகளையும் ஆர்ப்பாட்டக்காரர்களிடையே காணமுடிகின்றது. கூடவே, நியூசிலாந்துக்கு வெளியேயிருந்தும்கூட நிதி ஆதாரம் கிடைப்பதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் சொல்கின்றன. அந்த வகையிலேயும், ஆர்ப்பாட்டக்காரர்களின் நோக்கம் கேள்விக்குட்படுகின்றது.

தன்னெழுச்சியான மக்கள் ஆர்ப்பாட்டங்கள் வலுவானவையாகும். அதனை நியூசிலாந்து எப்போதுமே நிராகரிப்பதில்லை. பொதுவாகப் பாராளுமன்ற முன்றலிலே நடைபெறுகின்ற ஆர்ப்பாட்டங்களிலே, ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேசுவதும், குறைகளைக்கேட்பதும் அரசியல்வாதிகளின் மரபாகும். அஃது ஆர்ப்பாட்டத்தின் குரலுக்கு அளிக்கப்படுகின்ற கௌரவமாகும்.

ஆனால், தற்போதைய பாராளுமன்ற முற்றுகை சட்ட விரோதமானது என்பதே பொதுசன அபிப்பிராயமாகும். அதனால், ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேசுவதில்லை என்னும் அரசின் முடிவைத் தேசம் ஏற்றுக்கொள்கின்றது. அதேவேளையில், ஒருதொகுதி மக்களின் ஆர்ப்பாட்டம் செய்கின்ற உரிமையையும் தேசம் அங்கீகரிக்கின்றது. அதுவே நியூசிலாந்தின் சனநாயக மாண்பாகும். ●

பயங்கரவாத தடை சட்டத்துக்கான திருத்தங்கள் குறைப்பாடுகளை நீக்கும் வகையில் இல்லை

32 சிவில், சமூக அமைப்புக்களின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (தற்காலிக ஏற்பாடுகள்) மீதான திருத்தச் சட்ட மூலத்தினை அரசாங்கம் அண்மை யில் வர்த்தமானியில் வெளி யிட்டது. பாரிய மனித உரிமை மீறல் களுக்கு வழிவகுக்கின்ற பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் எந்தவொரு குறை பாடுகளையும் அகற்றும் வகையில் முன் மொழியப்பட்டுள்ள திருத்தங்கள் காணப்படாததையிட்டு எமது ஆழ்ந்த அதிருப்தியை வெளியிடுகின்றோம்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் வர லாற்று ரீதியாக தமிழ் மக்களுக்கு எதிரா கப் பயன்படுத்தப்பட்டு வருவதையும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின் னர் அது முஸ்லிம்களுக்கு எதிராக பயன் படுத்தப்பட்டு வருவதுடன் தற்போது மாற்றுக்கருத்துக்களைக் கொண்டோரை யும் இலக்கு வைக்க பயன்படுவதையும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்யவும் அதற்கு இடைப் பட்ட காலத்தில் அதன் பிரயோகத்தை தடை செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் நாம் முன்னர் விடுத்த கோரிக்கையை இவ்விடத்தில் மீளக் குறிப்பிட விரும்புகின்றோம். இக்கோரிக்கை குறித்த சட்டத்தினால் தீவிரமாக பாதிக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் சமூகங்கள் மேற்கொண்ட கோரிக்கைகளுக்கு ஒத்திசைவானதாகக் காணப்படுகின்றது. இச்சட்டத்தினைப் பிரயோகித்து கைதுசெய்யப்பட்ட மற்றும் தடுத்துவைக்கப்பட்ட நபர்களில் பிணைச் சட்டத்தின் கீழ் பிணை வழங்க தகுதியற்றவர்களைத் தவிர அனைத்து நபர்களையும் பிணையில் விடுவிக்கு மாறும் குற்ற ஒப்புதல் முதன்மையான அல்லது ஒரேயொரு சான்றாகக் காணப் படும் நிலைகளில் மேற்கொள்ளப்படும் வழக்குத் தொடரல் நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறும் நாம் அரசாங்கத்தி டம் கோரிக்கை விடுக்கின்றோம்.

முன்மொழியப்பட்டுள்ள திருத்தங் கள் சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் (ICCPR) போன்ற சர்வதேச ஒப்பந்தங் களில் பொதிந்துள்ள மனித உரிமை நியமங்களை பின்பற்றியொழுகாததாக அமைந்துள்ளன. மேற்குறித்து ICCPR சமவாயம் இலங்கை அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள நிலையில் அத னைப் பாதுகாக்கும் மற்றும் மதிக்கும் கடப்பாடு இலங்கை அரசுக்கு உள்ளது. மேலும், முன்மொழியப்பட்டுள்ள இந்த சீர்திருத்தங்கள் இலங்கை அரசியல மைப்பின் பல ஏற்பாடுகளை பின்பற்றி யொழுகாதனவாக அமைந்துள்ளன. குறித்த சீர்திருத்தங்களில் காணப்படும் பிரதான குறைபாடுகளை நாம் கீழே குறிப்பிடுகின்றோம்:

நிர்வாக ரீதியான தடுத்துவைப்பு 18 மாதங்களில் இருந்து 12 மாதங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. இது அவ்வா றான தடுத்துவைத்தலுடன் இணைந் துள்ள அடிப்படை பிரச்சினைகள் எவற்றையும் தீர்ப்பதாக அமைய வில்லை. இங்கு தக்கவாறான வழிமுறை பாதுகாப்புகள் எவையும் காணப்பட வில்லை, இந்நிலை எதேச்சையான கைது மற்றும் தடுத்துவைத்தலை இயலுமாக்கு கின்றது.

பல தரப்பட்ட சிவில் சுதந்திரங்க ளைக் கட்டுப்படுத்தும் வகையில் கட்டுப்பாட்டு ஆணைகளைப் பிறப்பிக் கும் அதிகாரத்தை பிரிவு 11 பாதுகாப்பு அமைச்சருக்கு வழங்குகின்றது. இந்தப் பிரிவுக்கு முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்களில் குறித்த நபர் மீது அவ்வா றான ஆணைகளைப் பிறப்பிக்க முன்னர் அவர் சட்ட வைத்திய அதிகாரி மற்றும் நீதவானின் முன் முன்னிலைப்படுத்தும் தேவை ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனினும், இது குறித்த நபரின் சிவில் சுதந்திரங்களை மீறப்படுவதில் இருந்து தடைகளை ஏற்படுத்தவோ இப்பிரச்சி னையை தீர்ப்பதிலோ எந்தவித பங்களிப் பையும் செலுத்தாது.

பிணை வழங்குவது தொடர்பில் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்கள் வெறுமனே அழகுபடுத்தும் திருத்தங்க ளாக அமைந்துள்ளதுடன், நபர்கள் வழக்கு விசாரணைகளுக்கு முன்னர் நீண்டகாலம் தடுத்துவைக்கப்படுவது தொடர்பான பிரச்சினையைத் தீர்ப்பதில் எந்தவித பங்களிப்பையும் வழங்க வில்லை. ஒரு நபர் கைதுசெய்யப்பட்டு 12 மாதங்கள் தடுத்துவைக்கப்பட்டு அல்லது தடுப்புக் காவலில் வைக்கப் பட்ட பின்னரும் அவருக்கு வழக்கு விசாரணை தொடங் கப்படாத பட்சத் தில் அல்லது உயர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரத்துக்கு பதில் வைக்கப் பட்டு 12 மாதங்கள் கடந்த பின்னரும் வழக்கு விசாரணை தொடங்கப்படாத பட்சத்தில் குறித்த நபர் பிணைக்கு விண்ணப்பிக்க முடியும் என புதிய முன்மொழிவு குறிப்பிடுகின்றது. வழக்கு விசாரணை ஆரம்பமாகினால் குறித்த நபர் வழக்கு விசாரணை முடியும் வரை நீதிமன்றக் காவலில் வைக்கப்பட முடி யும். எனவே, நடைமுறையில் இந்த முன் மொழிவு தடுத்து வைக்கப்பட்ட நபரின் சூழ்நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றங் கள் எவற்றையும் கொண்டுவரவில்லை.

முன்மொழிவில் குறிப்பிடப்பட்ட இன்னொரு ஏற்பாட்டில், சித்திரவ தையை முன்தடுக்கும் நோக்கில் நீதவான் கள் நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களுக்கு மாதமொரு தடவை விஜ யம் செய்ய வேண்டும் என தேவைப் படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு ஏற்ப, நப ரொருவர் சித்திரவதைக்கு உட்படுத் தப்பட்டுள்ளார் என நீதவான் கருதினால் அந்நபரை சட்ட வைத்திய அதிகாரி யிடம் "ஆற்றுப்படுத்தலாம்." எனவே, சட்ட வைத்திய அதிகாரியிடம் ஆற்றுப் படுத்துவது கட்டாயமானதாக அல்லா மல் விருப்பத்துக்கு உரிய விடயமாக அமைந்துள்ளது. மேலும், இம்முன் மொழிவு சித்திரவதைச் சம்பவங்களை விசாரணைக்காக பொலிஸ்மா அதி பரிடம் ஆற்றுப்படுத்துவதைத் தீர்மா னிக்கும் விருப்பத் தெரிவையும் நீத வானுக்கு வழங்குகின்றது.

முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்க ளில் நபர் ஒருவர் தனது நிர்வாக தடுத்து வைத்தலை உச்ச நீதிமன்றத்தில் பேராணை மனு (ரிட் மனு) ஒன்றை சவாலுக்கு உட்படுத்தும் உரிமையை வழங்குகின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மேற்கொள்ளப்படும் எதேச் சையான தடுத்துவைத்தல் உள்ளடங் கலாக அனைத்து தடுத்துவைத்தல்களை யும் சவாலுக்கு உட்படுத்தும் உரிமை இலங்கையின் அரசியலமைப்பில் பொதிந்துள்ளதுடன் முன்மொழியப் படும் இந்த உரிமை புதியதொரு உரிமை அல்ல என்பதையும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். நடைமுறையில், சட்ட உதவிகள் அரிதானவையாக உள்ள நிலையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட் டுள்ள நபர்களின் நிதியியல் வளங்கள் இல்லாத நிலையில் அவர்கள் தகுதி வாய்ந்த சட்ட பிரதிநிதித்துவத்தை அணுகி இந்தத் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. இவ்வகை யான நடவடிக்கைகளை அவர்கள் முன் னெடுக்கும் நிலையிலும் நீதித் தொடர் செயன்முறையில் காணப்படும் நீண்ட தாமதங்கள் காரணமாக இவ்வகைத் தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் மாதக்கணக்கில், சில வேளை களில் வருடக் கணக்கில் காத்திருக்கும் நிலை உள்ளது.

இதே போன்று, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வழங்கப் பட்டுள்ள பணிப் பொறுப்புகளில் சுதந்திரம் பறிக்கப்பட்ட நபர்களின் நலன்புரி விடயங்களைக் கண்காணித்தல் உள்ளடங்குவதுடன், அவ்வாணைக்குழு வுக்கு அறிவித்தல் வழங்காமல் எந்த வொரு தடுத்துவைத்தல் வசதியையும் அணுகும் அதிகாரம் வழங்கப்பட்டுள் ளது. எவ்வாறாயினும், அரசியலமைப் புக்கு மேற்கொள்ளப்பட்ட 20ஆவது திருத்தத்தின் பின்னர், அவ்வாணைக்குழு வின் உறுப்பினர்களின் நியமனம் ஜனாதி பதியின் விருப்புக்கு ஏற்ப இடம்பெறு வதால் அது சட்ட ரீதியாக சுயாதீனமாக செயற்படும் ஆற்றல் அற்றதாகக் காணப்படுகின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு முன்மொழியப் பட்டுள்ள திருத்தங்கள் ஊடாக அரசியல மைப்பின் 20ஆவது திருத்தத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள தீங்கான தாக் கங்களை எந்த வகையிலும் அகற்ற முடி யாது.

குறிப்பாக கடந்த இரண்டு வருடங் களில் பயங்கரவாதத் தடைச் சட்டம் சிவில் சமூகம், மனித உரிமை பாது காவலர்கள் மற்றும் ஊடகவியலாளர் களை மிரட்டுவதற்கும் அவர்களுக்குத் தொந்தரவுகளை ஏற்படுத்தவும் பயன் படுத்தப்பட்டு வருகின்றது. விசேடமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இந்நிலை அவதானிக்கத்தக்க வகையில் உள்ளது. இவ்வாறான நபர்களின் நட வடிக்கைகள் தொடர்பான தகவல்களை சேகரிப்பதற்காக அலுவலகங்களுக்குள் பயங்கரவாத புலன் விசாரணைப் பிரிவு அதிகாரிகள் செல்லுதல, அவர்கள் பயங்கரவாத புலன் விசாரணை பிரிவின் அலுவலகங்களுக்கு ஏதாவது சட்ட விரோத நிதி தொடர்பான விசாரணை களுக்காக அழைக்கப்படல், கைதுசெய் யப்படல் மற்றும் தடுத்துவைக்கப்படல் போன்ற சம்பவங்கள் பதிவாகியுள்ளன. எனினும், பயங்கரவாத குற்றங்களுடன் தொடர்புடைய நிதியியல் நடவடிக் கைகளில் எந்தவொரு சிவில் சமூக நிறுவனங்கள் தொடர்பு பட்டுள்ள மைக்கான எந்தவொரு சான்றுகளையும் பாதுகாப்பு தரப்பினரால் இது வரை சமர்ப்பிக்க முடியவில்லை.

முன்னேறிச் செல்வதற்கான வழி

முன்மொழியப்பட்டுள் திருத்தங்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்துடன் எந்த வித அடிப்படைக் குறைபாடுகளை யும் தீர்க்கும் வகையில் அமையவில்லை. மாறாக, அவர்கள் ஏற்கனவே காணப் படும், ஆனால் அடிக்கடி மீறப்படும் விடயங்களை மாற்றங்களாக பிரேரித் துள்ளனர் அல்லது பிரேரிக்கப்பட்ட விடயங்கள் வெறுமனே அழகுபடுத்தல் மாற்றங்களாக அமைந்துள்ளனவே அன்றி தற்போதைய நிலையை மாற்றுவ தற்குரிய ஏற்பாடுகளாக அமையவில்லை. வன்முறை மிக்க தீவிரவாத மதக் கோட் பாட்டைக் கொண்டிருப்போரை தீவிர மயமற்றவர்களாக மாற்றுவதற்கான ஒழுங்கு விதிகளை வழங்குதல் போன்ற அரசாங்கத்தின் செயற்பாடுகள் அரசாங்கம் கூறும் சீர்திருத்த உறுதி மொழிகளை கேள்விக்கு உட்படுத்துவ தாக அமைந்துள்ளன.

வரைபு உருவாக்க செயற்பாடுகளில் வெளிப்படைத் தன்மை காணப்பட வேண்டும் எனவும் முக்கிய அக்கறை கொண்டோரிடம் ஆலோசனைகள் பெறப்பட வேண்டும் எனவும் நாம் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் கோரிக்கைகள் தொடர்ச்சியாக புறக் கணிக்கப்பட்டு வருவதை நாம் இங்கு ஆழ்ந்த கவலையுடன் குறிப்பிடுகின் றோம்.

ஏற்கனவே பாகுபாட்டுக்கு உட்படுத் தப்பட்டுள்ள மற்றும் ஓரங்கட்டப்பட்ட சமூகங்களுக்குப் பாதுகாப்பற்ற நிலையை உருவாக்குவதன் மூலம் தேசிய பாது காப்பு எட்டப்பட முடியாது என்ற யதார்த்தத்தை நாம் மீள வலியுறுத்துவ தோடு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்யுமாறு மீண்டும் ஒரு தடவை நாம் கோரிக்கை விடுக்கின் றோம். இலங்கை கொண்டுள்ள பயங்கர வாத எதிர்ப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புக்கான சட்டத்தின் சட்டக வடிவம் மற்றும் அரச அமைப்புகளால் மேற்கொள்ளப்படும் வரலாற்று ரீதியான துஷ்பிரயோகம் என்பவற்றை நோக்கி பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத் துச் செய்தல் கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

அரசாங்கம் அடைய விரும்பும் தனிப் பட்ட சுதந்திரங்கள் மற்றும் தேசிய பாது காப்பு என்பவற்றுக்கு இடையான சம நிலை முரண்பாடு மற்றும் வன்முறை என்பவற்றை ஏற்படுத்தும் அடிப்படைக் காரணிகளை தீர்ப்பதன் மூலம் மாத்தி ரமே எட்டப்பட முடியும். தேசிய பாது காப்பு என்ற போர்வையில் சிவில் சுதந் திரங்களை மேலும் நசுக்க முனைவது அனைத்து சமூகங்களினதும் பாது காப்பற்ற நிலையை மேலும் தீவிரமாக் குவதுடன் அது இலங்கையில் சட்டத் தின் ஆட்சி மற்றும் ஜனநாயகத்துக்கு குந்தகம் விளைவிப்பதாகவே அமை யும். ●

புலமைச் சிகரம்

தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தான்

கல்வி tv CHANNEL

09) கீழே தரப்பட்டுள்ள உருக்களில் முக்கோணிகள் அற்ற உரு எது?



(1) (2) (3)

- **தரப்பட்டுள்ள ஐந்து சொற்களிலும் உள்ள எழுத்துக்களை அவதானித்து 10ஆம் 11ஆம் வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்க.**

பம்பரம்	மரகதமணி	சிங்காரம்	பாரம்பரியம்	கரகாட்டம்

10) ஐந்து சொற்களிலும் இடம்பெறும் எழுத்து எது?
(1) க (2) ம் (3) ர

11) ஐந்து சொற்களிலும் உள்ள எழுத்துக்களில் அதிக தடைவ இடம்பெற்றுள்ள எழுத்து எது?
(1) ர (2) ம் (3) ப

12) சகோதரர்கள் இருவரின் வயது வித்தியாசம் 11 ஆகும். அவர்களுள் இளையவரின் வயது 9 வருடங்கள் ஆகும் மூத்தவரின் வயது என்ன?
(1) 20 வருடங்கள் (2) 19 வருடங்கள் (3) 18 வருடங்கள்

- 13ஆம் 14ஆம் வினாக்களில் 5 நிகழ்ச்சிகள் தரப்படுகின்றன. அவை சரியான ஒழுங்கில் தரப்படவில்லை. அவற்றைச் சரியாக ஒழுங்குபடுத்தும் போது நடுவில் வரும் சம்பவத்தின் எழுத்தைத் தருப்பட்டுள்ள விடைகளிலிருந்த தெரிவு செய்க.

13) அம்மா கீரைச் சுண்டல் தயாரிக்க ஆயத்தமாகிறார்
A. கீரையைக் கழுவிக் கொண்டார்.
B. சந்தைக்குப் போய் தெரிந்து கீரைக்கட்டு வாங்கினார்.
C. துருவிய தேங்காயைப் போட்டுக் கிளறினார்.
D. கீரையைச் சிறிதாக அரிந்தார்.
E. அடுப்பிலிருந்து கீரைச் சுண்டலை இறக்கி வைத்தார்.

(1) D (2) A (3) B

14) கண்ணனின் பாடசாலையில் கல்விச் சுற்றுலா செல்வதற்குரிய ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.
அ. குளித்துப் புதுச் சீருடை அணிந்து தலை சீவினான்.
ஆ. அதிகாலை நான்கு மணிக்கெல்லாம் எழுந்துவிட்டான்.
இ. கண்ணனுக்கு இரவு நித்திரையே வரவில்லை.
ஈ. அம்மா தாயாரித்துத் தந்த உணவுப் பொதியை பைக்குள் வைத்தான்.
உ. வீட்டிலுள்ளவர்களிடம் பிரியாவிடை பெற்றுப்புறப்பட்டான்.
(1) ஈ (2) ஆ (3) அ

15) ஒரு செவ்வக வடிவான தாளில் முறையே (1), (2), (3) எனும் புள்ளிக்கோடுகளின் வழியே மூன்று தடவைகள் மடிக்கப்படுகிறது. பின் மூன்றாவதாக மடிக்கப்பட்ட உரு B யின் நடுவில் மூன்று துளைகள் இடப்பட்ட பின் தாளை விரித்துப் பார்த்தால் எத்தனை துளைகளைக் காணலாம்?
(1) 12
(2) 18
(3) 8



16) வகுப்பொன்றில் குழு ஒன்று அமைக்க இரண்டு மேசைகளும் அக்குழு மாணவரின் எண்ணிக்கை ஏற்ப கதிரைகளும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. 36 மாணவர்கள் உள்ள வகுப்பொன்றில் சமமான மாணவர்களைக் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டன. எனின் அவ்வகுப்பில் குழு அமைக்கப் பயன்படுத்தப்பட்ட மேசைகள் மற்றும் ஒரு குழுவில் உள்ள மாணவர்கள் முறையே,
(1) 6, 6 (2) 7, 12 (3) 12, 6

- **17ஆம், 18ஆம் வினாக்களுக்கு பின்வரும் தகவல்களைக் கொண்டு விடையளிக்குக.**

ரூபாய் 25.00

ரூபாய் 65.00

ரூபாய் 80.00

17) ஒரு வாழைப் பழத்தின் விலை எவ்வளவு?
(1) ரூபாய் 10.00 (2) ரூபாய் 15.00 (3) ரூபாய் 5.00

18) 2 அப்பிள் பழங்கள், 2 மாம்பழங்கள், 2 அன்னாசிப் பழங்கள், 2 வாழைப்பழங்கள் வாங்கத் தேவையான பணத்தொகை.
(1) ரூபாய் 180.00 (2) ரூபாய் 170.00 (3) ரூபாய் 165.00

விடைகள்

09) 3	13) 1	16) 3
10) 3	14) 3	17) 3
11) 2	15) 2	18) 2
12) 1		

கல்வி tv CHANNEL-1

19.02.2022
சனிக்கிழமை

நேரம்	தரம்	
05.15	தரம்-06	கணிதம்
06.00	தரம்-07	கணிதம்
06.45	தரம்-08	விஞ்ஞானம்
07.30	தரம்-09	கணிதம்
08.15	தரம்-10	தமிழ்
09.00	மாணவர்களுக்கானது	ஆலோசனை
09.15	க.பொ.த.உயர்தரம்	ஊடகம்
10.15	க.பொ.த.உயர்தரம்	கணக்கீடு
11.15	க.பொ.த.உயர்தரம்	கணிதம்
12.15	General knowledge	General knowledge
12.30	06 TO சாதாரணதரம்	English
01.15	க.பொ.த. சா.தரம்	மனைப்பொருளியல்
02.00	க.பொ.த. சா.தரம்	சித்திரம்
02.45	க.பொ.த. சா.தரம்	தமிழ் இலக்கியம்
03.30	க.பொ.த சா.தரம்	கத்தோலிக்கம்
04.15	க.பொ.த. சா.தரம்	புவியியல்
05.00	A/Lவினாத்தாள்	Live Telecast வணிகப்பிரிவு
06.00	தரம்-05	புலமைப்பரிசில் சிங்களம்
07.00	A/Lவினாத்தாள்	மறு ஒளிபரப்பு
08.00	தரம்-05	புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும்
09.00	க.பொ.த.உயர்தரம்	ஊடகம்
10.00	க.பொ.த.உயர்தரம்	கணக்கீடு
11.00	க.பொ.த.உயர்தரம்	கணிதம்
12.00	06 TO Learning English	English
12.45	க.பொ.தா சா.தரம்	மனைப்பொருளியல்
01.30	க.பொ.தா சா.தரம்	சித்திரம்
02.15	க.பொ.தா சா.தரம்	தமிழ்இலக்கியம்
03.00	க.பொ.தா சா.தரம்	கத்தோலிக்கம்
03.45	க.பொ.தா சா.தரம்	புவியியல்
04.30	தரம்-10	தமிழ்

கல்வி tv CHANNEL - 2

19.02.2022
சனிக்கிழமை

நேரம்	தரம்	
06.00	பஞ்சபுராணம்	பஞ்சபுராணம்
06.15	நற்கருணை	நற்கருணை
06.30	திருக்குறள் பொருள	நாள் ஒரு திருக்குறள்
06.45	PLAY GROUP	பாட்டு
07.30	முன்பள்ளி	அழகியல்
08.15	தரம்-01	அழகியல்
09.00	தரம்-02	கதை
09.45	தரம்-03	கிறிஸ்தவம்
10.30	தரம்-03	சைவசமயம்
11.15	தரம்-04	Computer
12.30	தரம்-04	கிறிஸ்தவம்
01.15	தரம்-05	Computer
02.00	தரம்-05	கிறிஸ்தவம்
02.45	புலமைப்பரிசில் பேப்பர்	புலமைப்பரிசில் பேப்பர்
03.30	PLAY GROUP	பாட்டு
04.15	முன்பள்ளி	அழகியல்
05.00	தரம்-01	English Cartoom
05.15	தரம்-02	கதை
06.00	தரம்-03	கிறிஸ்தவம்
06.45	தரம்-03	சைவசமயம்
07.30	தரம்-04	Computer
08.15	தரம்-04	கிறிஸ்தவம்
09.00	தரம்-05	Computer
09.45	தரம்-05	கிறிஸ்தவம்
10.30	புலமைப்பரிசில் பேப்பர்	புலமைப்பரிசில் பேப்பர்
11.15	தரம்-03	கிறிஸ்தவம்
12.30	தரம்-03	சைவசமயம்
01.15	தரம்-04	Computer
02.00	தரம்-04	கிறிஸ்தவம்
02.45	தரம்-05	Computer
03.30	தரம்-05	கிறிஸ்தவம்
04.15	புலமைப்பரிசில் பேப்பர்	புலமைப்பரிசில் பேப்பர்
05.00	English	CARTOON
05.30	English	பாட்டு

மரத் தளபாட நிலையத்தை திறந்து வைத்தார் ஆளுநர்!

திருகோணமலை, பெப். 19

கிழக்கு மாகாணத்திலுள்ள சுயதொழில் கைவினைஞர்களை ஊக்குவிக்கவும், அவர்களுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு கிழக்கு மாகாண கிராமிய தொழிற்துறை திணைக்களம் பெரும் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இதன் முதற்கட்டமாக, திருகோணமலை மாவட்ட உப்புவெளி சந்தியில் முதலாவது மரத்தளபாட விற்பனை நிலையம் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண கிராமிய தொழில்துறை திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி கவிதா உதயகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் கலந்து கொண்டு குறித்த மரத்தளபாட விற்பனை நிலையத்தை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துஷித பீ. வணிகசிங்க, முதலமைச்சின் செயலாளர் திருமதி கலாமதி பத்மராஜா, சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே. ஜே. முரளிதரன், வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ. எச். எம். அன்சார், பிரதிப் பிரதம செயலாளர் (நிருவாகம்) ஏ.மன்சூர் உள்ளிட்ட அமைச்சின் செயலாளர்கள், உதவிச் செயலாளர்கள், மாகாணப்பணிப்பாளர்கள், கணக்காளர்கள் மற் றும் பலர் இதில் கலந்துகொண்டனர். (ஐ)

வீடற்ற 10 குடும்பங்களுக்கு திருக்கோவிலில் வீடுகள்!

திருக்கோவில், பெப். 19

அம்பாறை - திருக்கோவில் பிரதேச செயலர் பிரிவில் கடந்த யுத்த காலத்தில் இடம்பெயர்ந்த - உதவி தேவைப்படும் 10 குடும்பங்களுக்கு வீடுகள் சம்பிரதாயபூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வுகள் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ. கஜேந்திரனின் தலைமையில் நேற்றுமுன்னதிம் மாலை இடம்பெற்ற போது பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான டபிள்யு. டி. வீரசிங்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பயனாளிகளிடம் வீடுகளை கையளித்தார்.

திருக்கோவில் பிரதேசத்தில் கடந்த யுத்த காலத்தில் பாதிக்கப்பட்டு வீடுகள் இன்றி வாழ்ந்து வந்த குடும்பங்களில் சுமார் 98 குடும்பங்களுக்கு பிரதேச செயலாளர் ரீ. கஜேந்திரனின் முயற்சின் ஊடாக மீள்குடியேற்ற அமைச்சின் நிதிப் பங்களிப்புடன் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டன.

குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைகளுக்கு ஏற்ப 6 இலட்சம் ரூபாய் மற்றும் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு தற்போது வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் கே.சதிசேகரன் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.அனோஜா திருக்கோவில் பிரதேச சபையின் தவிசாளர் இ.வி.கமலராஜன் திருக்கோவில் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கிராம சேவையாளர்கள் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நிருவாக உத்தியோகத்தர்கள் பாராளுமன்ற உறுப்பினரின் பிரதேச மாவட்ட இணைப்பாளர்கள் என பலரும் கலந்து கொண்டு இருந்தனர். (ஐ)

காரைதீவில் ஒருநாளில் 200 பேருக்கு பூஸ்டர்!

காரைதீவு, பெப். 19

சுகாதாரத் தொழிலாளர்களின் தொழில்சங்கப் போராட்டத்தின் பின்னர் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில், நேற்றுமுன்தினம் மட்டும் 200பேருக்கு மூன்றாவது டோஸான பைசர் தடுப்பூசி ஏற்றப்பட்டது.

இந்தத் தகவலை காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் தஸ்லிமா பஷீர் தெரிவித்தார்.

மேலும், இந்த மூன்றாவது தடுப்பூசி தொடர்ச்சியாக தினமும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ஏற்றப்படும் என்றும் பொதுமக்கள் தவறாமல் பைசர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டார். (ஐ)

ஓட்டமாவடியில் 3,561 சடலங்கள் நல்லடக்கம்!

ஓட்டமாவடி, பெப். 19

கொரோனா தொற்றுக் காரணமாக உயிரிழந்தவர்களில் ஓட்டமாவடியில் அடக்கம் செய்யப்பட்ட சடலங்களின் எண்ணிக்கை 3,561 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனா தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்கள் கிழக்கு மாகாணம் மட்டக்களப்பில் உள்ள ஓட்டமாவடியில் அடக்கம் செய்யப்படுகின்றன

இந்தநிலையில், நேற்று முன்தினம் அங்கு 5 சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டன. 3 இஸ்லாமியர்கள், ஒரு பௌத்தர், ஓர் இந்து ஆகியோரின் சடலங்களே அடக்கம் செய்யப்பட்டன.

இதையடுத்து அங்கு அடக்கம் செய்யப்பட்ட கொவிட்-19 தொற்றால் உயிரிழந்தவர்களின் சடலங்களின் எண்ணிக்கை 3,561 ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

சட்டவிரோதமாக அமைத்த வேலிகள் அகற்றப்பட்டன!

மட்டக்களப்பு, பெப். 19

மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியில் மஜ்மா நகர் பிரதேசத்தில் புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளை சட்டவிரோதமான முறையில் சிலநபர்கள் வேலி அமைத்ததை புகையிரத திணைக்கள அதிகாரிகள் பாதுகாப்புப் பிரிவினருடன் இணைந்து அக்கற்றியுள்ளனர் என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

புகையிரத பாதுகாப்பு சேவை உதவி அத்தியட்சகர் ஆர். பி. ஏ. ரத்னமலவின் பணிப் புரைக்கு அமைய மட்டக்களப்பு மாவட்ட புகையிரத பொறியியலாளர் ஆர். ஜே. அலெக்சாண்டரின் அனுசரணையோடு வருகை தந்த பொலிஸார் மற்றும் புகையிரத பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இணைந்து புகையிரத காணிக்குள் அமைக்கப்பட்ட வேலியை அகற்றியுள்ளனர்.

புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான காணியில் 15 நபர்கள் சட்டவிரோதமான முறையில் வேலி அமைத்த நிலையில் அந்த வேலி அக்கற்றப்பட்டு குறித்த நபர்களை காணிக்குள் வரவேண்டாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

திருகோவிலில் நேற்று நன்னீர் மீன் அறுவடை

திருக்கோவில், பெப். 19

திருக்கோவில்- விநாயகபுரம் பாலக்குடா கிராமத்தில் வளர்க்கப்பட்ட நன்னீர் மீன் வளர்ப்பு அறுவடை நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கிழக்கு மாகாண மீன்பிடி திணைக்கள பிரிவின் திருக்கோவில் பிரதேச நீரியல்வள அபிவிருத்தி உத்தியோகத்தர் இரா. அபராஜிதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சம்பிரதாய ரீதியாக மீன்கள் அறுவடை செய்யப்பட்டன.

திருக்கோவில் பிரதேசத்தில் நன்னீர் மீன்பிடி தொழிலை ஊக்கப்படுத்தும் நோக்குடன் கிழக்கு மாகாண மீன்பிடித் திணைக்களப் பிரிவின் அனுசரனையுடன் விநாயபுரம் பாலக்குடா கிராமத்தைச் சேர்ந்த மீனவர் ஒருவருக்கு அவரின் தனிப்பட்ட காணியில் சிறிய நீர் தடாகம் அமைத்து மானியமாக மீன்குஞ்சுகள் வழங்கப்பட்டு மீன் வளர்ப்பு திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வில் கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஜீ. முத்துவண்டா கிழக்கு மாகாண மீன்பிடித் திணைக்களப் பிரிவின் பணிப்பாளர் எஸ். சுதாகரன் திருக்கோவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் கே. சதிசேகரன் பிரதேச செயலக கைத்தொழில் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ரவீந்திரன் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

சுடரொளி

ஒமைக்ரோன் அடங்கினாலும் அதன் உப திரிவுகளினால் மீண்டும் ஆபத்து!

உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

ஜெனிவா, பெப். 19

உலகெங்கும் பெரும் நெருக்கடிகளுக்கு வழிவகுத்த மிகத் தீவிரமாக பரவும் ஒமைக்ரோன் திரிவு தொற்று பரவல் குறைந்துவருகின்ற போதும், அதன் உப திரிபுகள் குறித்து உலகம் தொடர்ந்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என உலக சுகாதார அமைப் பின் கொரோனா தொழில்நுட்ப ஆய்வுப் பிரிவின் தலைவர் மரியா வான் கெர்கோவ் எச்சரித்துள்ளார்.

ஒமைக்ரோன் பரவல் சற்று அடங்கிவரும் நிலையில் பல நாடுகள் கடுமையான கட்டுப்பாடுகளை நீக்கி வருகின்றமை குறித்து கவலை அடைவதாக கடந்த வியாழக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் தெரிவித்தார்.

ஒமைக்ரோன் பல துணை திரிபுகளை கொண்டுள்ளது. பிஏ.1, பிஏ.1.1, பிஏ.2 மற்றும் பிஏ.3 போன்ற திரிபுகள் கவலை அளிக்கும் வகையில் உள்ளன எனவும் மரியா வான் கெர்கோவ் குறிப்பிட்டார்.

இவற்றில் உப திரிபுகளான பிஏ.1. பிஏ.2 திரிபு தொற்று அதிகரித்து வருவதை காண முடிகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த வாரம் உலகெங்கும் கோவிட் -19 தொற்று நோயால் கிட்டத்தட்ட 75,000 பேர் உயிரிழந்துள்ளதாக மரியா வான் கெர்கோவ் தெரிவித்தார்.

டெல்டா அலை அதிக உயிர் பலியெடுத்தது. பின்னர், ஒமைக்ரோன் உலகத்தையே முடக்கிப்போட்டது. இந்நிலையில் ஒமைக்ரோன் உப திரிபுகளால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களையும் நாங்கள் குறைத்து மதிப்பிட முடியாது.

கட்டுப்பாடுகளை தளர்த்தி முற்றிலும் இயல்பு நிலைக்குத் திரும்ப நினைப்பது தொற்றுநோய் இன்னும் நீண்ட காலத்திற்கு தொடர வழிவகுக்கும்.

நாம் எல்லை மீறி சென்றால் மீண்டும் ஆபத்தை சந்திக்க நேரிடலாம் எனவும் உலக சுகாதார அமைப்பின் கொரோனா தொழில்நுட்ப ஆய்வுப் பிரிவின் தலைவர் மரியா வான் கெர்கோவ் எச்சரித்தார். (அ)

ஒட்டாவாவை முற்றுகையிட்டோரை கைது செய்யும் நடவடிக்கை ஆரம்பம்!

ஒட்டாவா, பெப். 19

கனடா தலைநகர் - ஒட்டாவாவை ஆக்கிரமித்துள்ள கனரக வாகன சாரதிகள் மற்றும் போராட்ட அமைப்பாளர்கள் பலர் ஒட்டாவா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நகரப் பகுதியை விட்டு வெளியேறுமாறு பல தடவைகள் விடுக்கப்பட்ட எச்சரிக்கைகளை அவர்கள் புறக்கணித்ததை அடுத்து கைது நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு நேரப்படி கடந்த வியாழக்கிழமை மாலை பாராளுமன்ற வளாகத்தை முற்றுகையிட்டிருந்த போராட்டக்காரர்கள் பலர் கைது செய்யப்பட்டு, கைவிலங்கிட்டு அழைத்துச் செல்லப்பட்டனர். போராட்ட அமைப்பாளர்களான கிறிஸ் பார்பர் மற்றும் தமரா லிச் உட்பட பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். கிறிஸ் பார்பர் கைது செய்யப்பட்டதை சக அமைப்பாளர்களில் ஒருவரான பாட் கிங் உறுதிப்படுத்தினார். அமைப்பாளர்களில் சிலர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதை அவர்களின் வழக்கறிஞர் லிச் ஊடகங்களிடம் உறுதி செய்தார்.

கைதுகள் இடம்பெற்று வருகின்ற போதும் ஆங்காங்கே வாகனங்களுடன் ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. மத்திய அரசின் கட்டாய கோவிட் தடுப்பூசி ஆணை மற்றும் கோவிட் கட்டுப்பாடுகளை எதிர்த்து பாராளுமன்றம் அமைந்துள்ள வெலிங்டன் தெரு மற்றும் அதன் சுற்றுப்புறங்களை முற்றுகையிட்டு ஜனவரி மாத இறுதியில் இருந்து எதிர்ப்பாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். வாகனங்களில் இருந்து ஒலியெழுப்ப நீதிமன்றம் பிறப்பித்துள்ள தடை உத்தரவுகளையும் போராட்டக்காரர்கள் மீறி வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் போராட்டக்காரர்களை கைது செய்து அகற்றுவதற்கான உடனடி நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என ஒட்டாவா நகர பொலிஸார் விடுத்த எச்சரிக்கையை தொடர்ந்து கைது நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ)

உக்ரைன் கிழக்குப் பகுதியில் நேற்று 29 முறை குண்டுவீச்சு!

பதற்றம் மேலும் அதிகரிப்பு

கிவி, பெப். 19

டான்பஸ் மாகாணத்தில் உக்ரைன் கட்டுப்பாட்டில் உள்ள ஸ்டைனிஸ்டியா லுகன்ஸ்கா என்ற நகரில் உள்ள ஒரு கிராமத்தில் நேற்று திடீரென குண்டுவீச்சு தாக்குதல் நடைபெற்றது.

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையே பல ஆண்டுகளாக எல்லைப்பிரச்சினை உள்ளது. உக்ரைனின் கிரிமியா தீபகற்பத்தை 2014 ஆம் ஆண்டு ரஷ்யா கைப்பற்றியது. இதனை தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையான மோதல் அதிகரித்து வருகிறது.

உக்ரைன் எல்லையில் கடந்த ஆண்டு நவம்பர் முதல் ரஷ்யா தனது படைகளை குவித்தது. 1 லட்சத்துக்கும் அதிகமான வீரர்களை உக்ரைன் எல்லையில் ரஷ்யா குவித்தது. இதனால், உக்ரைன் மீது ரஷ்யா படையெடுக்கலாம் என்ற அச்சம் நிலவி வந்தது. அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அமைப்பில் உக்ரைனை சேர்ப்பதற்கும் எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலேயே ரஷ்யா இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக தகவல் வெளியானது.

ரஷ்யா படையெடுக்கும்பட்சத்தில் உக்ரைனுக்கு ஆதரவு அளிப்போம் என அமெரிக்கா, நேட்டோ படைகள் தெரிவித்தன. மேலும், உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் நேட்டோ அமைப்பில் உள்ள சில நாடுகள் ஆயுதங்களை அனுப்பி வைத்தன.

இதனால், ரஷ்யா - உக்ரைன் எல்லையில் போர் பதற்றம் அதிகரித்து வந்தது. போர் பதற்றத்தை தணிக்க பல்வேறு நாடுகள் முயற்சித்து வந்தன.

அதன் பின்னர், பல்வேறு நாட்டு

தலைவர்களின் பேச்சுவார்த்தை மற்றும் அமெரிக்க அதிபரின் எச்சரிக்கை என பலதரப்பு செயல்பாடுகளுக்கு பின்னர் கிரிமியாவில் நடைபெற்று வந்த போர் பயிற்சி நிறைவு பெறுவதாகவும், படைகள் முகாம் திரும்புகின்றன என்றும் ரஷ்யா அறிவித்தது.

ஆனால், உக்ரைன் எல்லையில் தனது படைகளை குறைப்பதாக ரஷ்யா கூறுவதில் எந்த ஆதாரமும் இல்லை. தொடர்ந்து எல்லைகள் ரஷிய படைகள் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. அந்த படைகள் இன்னும் ஒரிரு நாட்களில் உக்ரைன் மீது படையெடுக்கலாம் என்று அமெரிக்கா எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்நிலையில், உக்ரைன் மீது நேற்று குண்டுவீச்சு தாக்குதல் நடைபெற்றுள்ளது. டான்பஸ் உக்ரைனின் எல்லையோர மாகாணமாகும். இந்த மாகாணத்தில் ஒரு பகுதி உக்ரைனின் கட்டுப்பாட்டிலும், மற்றொரு பகுதி ரழ்ஹய ஆதரவு கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டிலும் உள்ளது.

டான்பஸ் மாகாணத்தில் உக்ரைன் கட்டுப்பாட்டில் உள்ள ஸ்டைனிஸ்டியா லுகன்ஸ்கா என்ற நகரில் உள்ள ஒரு கிராமத்தில் நேற்று திடீரென குண்டுவீச்சு தாக்குதல் நடைபெற்றது. அந்த கிராமத்தில் உள்ள மழலையர் பள்ளி மீது இந்த தாக்குதல் நடைபெற்றதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. மேலும் 29 முறை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

அடுத்தடுத்து குண்டுகள் வீசப்பட்டதாகவும், இந்த தாக்குதலில் மழலையர் பள்ளியில் பணியாற்றி வந்த 2 ஆசிரியர்கள் காயமடைந்ததாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. மேலும், தாக்குதலுக்கு உள்ளான கிராமத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் உக்ரைன் கிழக்கு பகுதியில் பதற்றம் அதிகரித்துள்ளது. (அ)

தூதரக துணைத் தலைவரை வெளியேற்றிவிட்டது ரஷ்யா

அமெரிக்கா குற்றச்சாட்டு

மொஸ்கோ, பெப். 19

மொஸ்கோவில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் இருந்த இரண்டாவது மூத்த இராஜதந்திரியை, எந்தவித நியாயமும் இல்லாமல் ரஷ்யா வெளியேற்றியதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

தூதரகத்தில் உள்ள தூதருக்கு அடுத்தபடியாக மொஸ்கோவில் உள்ள அமெரிக்க துணைத் தூதுவர் பார்ட் கோர்மன், இந்த ஆண்டின் தொடக்கத்தில் ரஷ்யாவால் வெளியேற்றப்பட்டார் மற்றும் நாட்டை விட்டு வெளியேற இரண்டு வாரங்கள் அவகாசம் அளித்ததாக அமெரிக்க வெளியுறவுத்துறை மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும், கோர்மன் கடந்த வாரம் ரஷ்யாவை விட்டு வெளியேறி அமெரிக்கா திரும்பியுள்ளார் என்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பு பற்றிய வளர்ந்து வரும் கவலைகள் மற்றும் அடுத்த சில

நாட்களில் ரஷ்யா உக்ரைனைத் தாக்க திட்டமிட்டுள்ளது என்பதற்கான எல்லா அறிகுறிகளும் அமெரிக்காவிடம் உள்ளது என்று ஜனாதிபதி ஜோ பைடனின் எச்சரிக்கைக்கு மத்தியில் இந்த இராஜதந்திர பிரச்னை வந்துள்ளது.

அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் கடந்த வியாழக்கிழமை கோர்மனை ரஷ்யா வெளியேற்றியதை உறுதிப்படுத்தினார்.

வெளியேற்றப்பட்ட பார்ட் கோர்மன், அமெரிக்க தூதரகத்தில் இரண்டாம் இடத்தில் இருப்பவர். 3 ஆண்டுகளாக அவர் அங்கு பணியாற்றி உள்ளதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சக செய்தித்தொடர்பாளர் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், 'இது ஒரு தீவிர நடவடிக்கையாக நாங்கள் கருதுகிறோம், மேலும் எங்கள் பதிலை பரிசீலித்து வருகிறோம்' என கூறினார்.

கோர்மன் செல்லுபடியாகும் விஸாவுடன் ரஷ்யாவில் மூன்று வருடங்களுக்கும் குறைவாகவே இருந்தார். அவரது சுற்றுப்பயணம் முடிவடையவில்லை. கோர்மன் தூதரகத்தின் மூத்த தலைமைக் குழுவில் முக்கிய உறுப்பினர் என்றும் குறிப்பிட்டார்.

'அமெரிக்க தூதர்கள் மற்றும் ஊழியர்களை அடிப்படையற்ற வெளியேற்றத்தை முடிவுக்கு கொண்டு வரவும், எங்கள் பணிகளை மீண்டும் கட்டியெழுப்ப ஆக்கப்பூர்வமாக செயற்படவும் ரஷ்யாவை நாங்கள் அழைக்கிறோம்,' என்று செய்தித் தொடர்பாளர் மேலும் கூறினார். (அ)

நியூசிலாந்துடனான டெஸ்ட்:

தோல்வியின் பிடியில் தென்னாபிரிக்க அணி!

கிறிஸ்ட்சேர்ச், பெப். 19

முதல் நாளைப் போலவே இரண்டாவது நாளிலும் சிறப்பாகப் பந்துவீசி, முதல் டெஸ்டில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது நியூசிலாந்து அணி.

தென்னாபிரிக்க அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் செய்து 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது. நேற்று முன்தினம் முதல் போட்டி கிறிஸ்ட்சேர்ச்சில் தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, 49.2 ஓவர்கள் மட்டும் விளையாடி 95 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. மேட் ஹென்றி அட்டகாசமாகப் பந்துவீசி 7 விக்கெட்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 39 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 118 ஓட்டங்கள் பெற்ற நிலையில் முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

இந்த நிலையில், நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் தொடங்கியபோது,

நேற்று இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடியது நியூசிலாந்து அணி. ஹென்றி நிகோல்ஸ் 37, நீல் வாக்னர் 2 ஓட்டங்களுடன் தொடர்ந்து துடுப்பெடுத்தாடினர்.

117.5 ஓவர்களை எதிர்கொண்ட நியூசிலாந்து அணி 482 ஓட்டங்களை குவித்தது.

ஹென்றி நிகோல்ஸ் 105 ஓட்டங்கள், ரொம் பிளெண்டல் 96 ஓட்டங்களும் எடுத்தார்கள். நிகோல்ஸின் 8ஆவது டெஸ்ட் சதம் இது. இறுதித் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய ஹென்றி ஆட்டமிழக்காமல் 58 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார்.

கடைசி விக்கெட்டுக்கு பிளெண்டலும் ஹென்றியும் 94 ஓட்டங்கள் எடுத்தனர்.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் அலிவியர் 3 விக்கெட்களை வீழ்த்தினார். முதல் இனிங்ஸில் நியூசிலாந்து அணி 387 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது.

இரண்டாவது இனிங்ஸிலும் தென்னாபிரிக்காவின் துடுப்பட்டக்காரர்களுக்கு சோதனை தொடர்ந்தது. தொடக்க வீரர்களை (எர்வீ, எல்கர்) ஓட்டம் எதுவும் எடுக்க விடாமல் வெளியேற்றினார்கள் சௌதியும் ஹென்றியும்.

மார்க்ரம் 2 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். 2ஆம் நாள் முடிவில் தென்னாபிரிக்க அணி, 9 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 34 ஓட்டங்கள் எடுத்து தோல்வியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. வொண்டர் டுசென் 9, பவுமா 22 ஓட்ட்களுடன் களத்தில் உள்ளார்கள்.

தென்னாப்பிரிக்க அணி 7 விக்கெட்கள் மீதமுள்ள நிலையில் 353 ஓட்டங்கள் பின்தங்கியுள்ளது.

தொடர்ந்து இரண்டாவது நாளாக டெஸ்டில் ஆதிக்கம் செலுத்தும் நியூசிலாந்து அணி 3ஆவது நாளன்று வெற்றி பெற்று தொடரில் முன்னிலை பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

தேசிய சுப்பர் லீக் கிரிக்கெட்:

யாழ்ப்பாணம், கண்டி அணிகள் இறுதி போட்டியில் இன்று மோதல்!

கொழும்பு, பெப். 19

தேசிய சுப்பர் லீக் கிரிகெட் தொடரின் யாழ்ப்பாணம், கண்டி அணிகள் இன்று சனிக்கிழமை நடக்கவுள்ள இறுதிப் போட்டியில் மோதவுள்ளன.

முன்னதாக, யாழ்ப்பாண அணி கொழும்பு அணியை 4 விக்கெட்களால் வெற்றி கொண்டிருந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 195 ஓட்டங்களை பெற்றது. அந்த அணி சார்பாக ரொஷேன் சில்வா 64 ஓட்டங்களையும், நுவனிந்து பெர்னாண்டோ 37 ஓட்டங்களையும் அதிகப்பட்சமாக பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் நுவன் பிரதீப், தனஞ்சய டி சில்வா இருவரும் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

இலகுவான இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாண அணி தனஞ்சய டி சில்வா ஆட்டமிழக்காது பெற்றுக்கொடுத்த 79 ஓட்டங்கள் வெற்றிக்கு பெரிதும் உதவியது. அவ்வணி 46.5 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 198 ஓட்டங்களைப் பெற்று 4 விக்கெட்களால் வெற்றியீட்டி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இதேபோல, கண்டி அணி காலி அணியை 66 ஓட்டங்களால் வென்றிருந்தது. ஏற்கனவே, இறுதிப் போட்டிக்கான வாய்ப்பை உறுதி செய்திருந்த கண்டி அணி காலி அணியை எதிர்த்தாடியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கண்டி அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்களை மாத்திரம் இழந்து 343 ஓட்டங்களை குவித்தது. துடுப்பாட்டத்தில் ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய நிரோஷன் திக்வெல்ல, லஹிரு உதார இருவரும் சதம் அடித்து அசத்தினர். இந்த ஜோடி ஆரம்ப விக்கெட்டுக்காக 233 ஓட்டங்களை பகிர்ந்திருந்த போது நிரோஷன் திக்வெல்ல ஆட்டமிழந்தார்.

இவர் 104 பந்துகளில் 2 சிக்ஸர்கள் 17 பௌண்ட்ரிகள் அடங்கலாக 135 ஓட்டங்களை விளாசினார். மறுபுறத்தில் லஹிரு உதார 116 பந்துகளில் 2 சிக்ஸர்கள் 10 பௌண்ட்ரிகள் அடங்கலாக 106 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார். இவர்களைத் தவிர, அணித்தலைவர் கமிந்து மெண்டிஸும் தன் பங்குக்கு 58 ஓட்டங்களை அதிரடியாக பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில், சலன டி சில்வா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய காலி அணி 47.1 ஓவர்களில் 277 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்து 66 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. பந்துவீச்சில், அஷெய்ன் டேனியல் 4 விக்கெட்களையும், புலின தரங்க 3 விக்கெட்களையும் வீழ்த்தி அணியின் வெற்றிக்கு பங்காற்றினர். (ஐ)

டுபாய் சம்பியன் ஷிப் அரையிறுதியில் ஹாலேப்!

டுபாய், பெப். 19

டுபாய் ரென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டியில் பிரபல வீராங்கனைகளான சிமோனா ஹாலேப், ஒஸ்ரா பென்கோ, வொன்ட்ரசோவா, குடர்மெற்றோவா ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறினர்.

டுபாயில் சம்பியன்ஷிப் ரென்னிஸ் தொடர் நடக்கிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த காலிறுதிப் போட்டியில் ருமேனியாவின் சிமோனா ஹாலேப் துனிசியாவின் ஒன்ஸ் ஜபேரை எதிர்கொண்டார்.

இதில், 6 - 4, 6-3 என்ற செற் கணக்கில் ஹாலேப் இலகுவாக வெற்றி பெற்ற ஹாலேப் அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதிப் போட்டியில் செக் குடியரசின் வொன்ட்ரசோவா உக்ரைனின் டயானாவை எதிர் கொண்டார். இதில் 7 - 5, 6 - 4 என்ற செற்களில் வொன்ட்ர சோவா வெற்றி கொண்டார். இதேபோன்று மற்றைய இரு காலிறுதிப் போட்டிகளிலும், ஒஸ்ராபென்கோ, குடர்மெற்றோவா ஆகியோர் வெற்றி பெற்றனர். (ஐ)

பாரிஸ் ஒலிம்பிக் தங்கத்துக்கு குறிவைக்கிறார் ஜோகோவிச்

லண்டன், பெப். 19

20 கிராண்ட்ஸ்லம் பட்டங்களுடன் ஒலிம்பிக் தங்கப் பதக்கத்தை சேர்க்க 2024 பாரிஸ் நடக்கும் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கவுள்ளார் என்று உலகின் முதல் நிலை வீரரான ஜோகோவிச் தெரிவித்துள்ளார்.

ஜோகோவிச் 2008ஆம் ஆண்டு பீஜிங் ஒலிம்பிக்கில் பங்கேற்று வெண்கலம் வென்றார். ஆனால், ரோக்கியோ 2020இல் நடத்த போட்டியில் அரையிறுதியில் தோல்வியடைந்ததால் பதக்கம் வெல்லவில்லை.

இந்த நிலையில், 36 வயதான சேர்பியாவின் ஜோகோவிச் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த நேர்காணலில், “ஒலிம்பிக் பதக்கம் குறிப்பாகத் தங்கம் என்பது எப்போதும் ஒரு பெரிய ஆசை”, என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜோகோவிச் அவுஸ்திரேலிய ஓப்பனில் தடுப்பூசி போடாமையால் பங்கேற்க முடியவில்லை. இந்த நிலையில், ரபேல் நடால் 21 கிராண்ட்ஸ்லம் பட்டத்தை வென்று சாதனை படைத்தார்.

இந்த நிலையில், தடுப்பூசி பெறாவிடினும் ஜோகோவிச் மே 2ஆம் திகதி தொடங்கும் இத்தாலி ஓப்பனில் பங்கேற்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த நாட்டின் அமைச்சர் ஒருவர் இதனை உறுதி செய்தார். (ஐ)

யாழ்ப்பாண மாவட்ட வெளியீட்டு பணியகம் நேற்று அங்குராப்பணம்

யாழ்ப்பாணம், பெப். 19

அரசாங்க தகவல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மாவட்ட வெளியீட்டு பணியகத்தின் அங்குராப்பண நிகழ்வு யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா , பாராளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், சுரேன் ராகவன் உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர். (அ-03)

மரண அறிவித்தல்

தோற்றம்
30
-
05
-
1948

மறைவு
15
-
02
-
2022

கணேசங்கரலால் அருளம்பலம்
(லால்)

யாழ். அரியாலையைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா Watford, London ஐ வதிவிடமாகவும் கொண்ட கணேசங்கரலால் அருளம்பலம் அவர்கள் 15.02.2022 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான அருளம்பலம் (ஆசிரியர்) - சந்திரா தம்பதியரின் அன்பு மகனும், பருத்தித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னுதுரை - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கம்மா அவர்களின் அன்புக் கணவரும், கவிதா, காலஞ்சென்றவனிதா, ரவிசங்கர், ரவிமோகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமார் அவர்களின் அன்புமாமனாரும், ராம கிருஷ்ணலால் (கிருஷ்ணா), பிறேமச்சந்திரலால் (பிறேமா),சிவத்தவலால்(சிவா),வாசுகி,காலஞ்சென்றமுரளிலால்(முரளி),ஸ்ரீரங்கன்(கண்ணன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், லக்ஷ்மன், லவன், தனுஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

பார்வைக்கு
Saturday, 19 Feb 2022 11:00 AM - 2:00 PM
Divinity Funeral Care 209 Kenton Rd, Kenton, Harrow HA3 0HD, United Kingdom

கிரியை
Sunday, 20 Feb 2022 2:30 PM
Barnet Multi Cultural Community Centre Ltd Hendon Sports Centre (Youth & Community Centre), Algernon Rd, London NW4 3TA, United Kingdom

தகனம்
Sunday, 20 Feb 2022 5:00 PM
Hendon Cemetery & Crematorium Holders Hill Rd, London NW7 1NB, UK

இவ் அறிவித்தலைஉற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறுகேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
பிரேமா(சகோதரன்) *00447815123466*
மோகன் (மகன்) - *00447868445824*
சிவா(சகோதரன்) *00447466095781*
கிருஸ்ணா(சகோதரன்) *00447761002882*

தகவல்:
குடும்பத்தினர்.

ஆபத்தான நிலையில் இலங்கை மத்திய வங்கி

பொருளாதார ஆய்வாளர்கள் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 19

கடந்த வருட இறுதியில் இரண்டு பில்லியன் டொலர் சொத்து பற்றாக்குறையை கொண்டிருந்த இலங்கை மத் திய வங்கி, தொடர்ந்தும் கைமாற்று கடன் வசதிகளின் கீழ் அந்நிய செலாவணியை பெற்றுக் கொண்டதால், பெரும் ஆபத் துக்கு உள்ளாகி இருப்பதாக பொருளாதார ஆய்வாளர்கள் பல சந்தர்ப்பங்களில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்த நிலைமை மிகவும் ஆபத்தானது என இலங்கை மத் திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் கலாநிதி டப்ளியூ.ஏ. விஜேவர்தன ஊடகங்களிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

பேராசிரியர் நிமல் அபேரத்ன, கலாநிதி ஆமிந்த மெத்சில, கலாநிதி நந்தசிறி கிஹிம்பிய ஹெட்டி, கலாநிதி நிஷான் டி மெல் ஆகிய பொருளாதார ஆய்வாளர்களும் இந்த நிலை மையை சுட்டிக்காட்டி இருந்தனர்.

இந்த நிலையில் கடந்த வாரம் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், மேலும் 250 மில்லியன் டொலர் அவசர கடனை வழங்குமாறு, இந்தியாவிடம் கோரியுள்ளார்.

2022 ஆம் ஆண்டில் கடந்த ஒன்றரை மாத காலத்தில் கைமாற்று கடன் வசதியின் கீழ் சுமார் 5 ஆயிரம் மில்லியன் டொலர் அந்நிய செலாவணியை பெற்றுக்கொள்வதற்கான இணக்கப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு கைமாற்றாக பெறப்படும் கடனுக்காக அதிக எவில் வட்டியை செலுத்த நேரிடும் என்பதுடன் இந்த கடன் மூலம் சொத்துக்கள் உருவாக்கப்படுவதில்லை என்பதால், குறிப்பாக இலங்கை மத் திய வங்கி மிகப் பெரிய ஆபத் துக்கு உள்ளாகி இருப்பதாக அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்த ஆண்டின் இறுதியில் வெளிநாட்டுக் கடன் மற்றும் வட்டியாக 6 ஆயிரத்து 903.7 மில்லியன் டொலர்களை செலுத்த வேண்டியுள்ளது. குறுகிய கால அன்றாட கொடுக் கல், வாங்கல்களுக்காக அந்நிய செலாவணியை கடனாக பெறு வதால், மிகப் பெரிய வட்டி தொகையும் சேர்ந்துள்ளது.

நாட்டின் நிதிக் கட்ட மைப்பை கையாளும் இலங்கை மத்திய வங்கியோ, அரசாங்கத் தில் உள்ள பொறுப்புக் கூற வேண்டிய நபர்களோ இது சம்பந்தமாக எவ்வித கவனத் தையும் செலுத்தாதது மிகப் பெரிய அழிவின் பிரதிபலனை பெற்றுக்கொடுக்க காரணமாக அமையும் என பொருளாதார ஆய்வாளர்கள் எச்சரித்துள் ளனர். (அ)

மலையக மக்களின் அரசியல் ஆவணம் பெப். 21இல் கொழும்பில் இறுதி வடிவம்

மனோ கணேசன் எம்.பி. தகவல்

கொழும்பு, பெப். 19

தமிழ் முற்போக்கு கூட்டணி யின் கோரிக்கையின் பேரில், கண்டி சமூக அபிவிருத்தி மன்றத்தின் சார்பில் அதன் தலைவர் பி. முத்துலிங்கம் மற் றும் சமூக செயல்பாட்டாளர் கௌதமன் பாலசந்திரன் ஆகி யோரின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்திய வம்சாவளி மலையக மக்களின் அரசியல் ஆவண வரைபு, பெப் ரவரி 21ஆம் திகதி கொழும்பில் கலந்துரையாடப்பட்டு இறுதி வடிவம் பெறும்.

இந்த கலந்துரையாடலில் தமிழ் முற்போக்கு கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள், கூட்டணி கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் மலையக சிந்தனையாளர்கள் கலந்துக்கொள் வார்கள் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மனோ கணேசன் மேலும் தெரிவிக் கையில்-

இறுதி வடிவம் பெறுகின்ற இந்த ஆவணம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந் திய பிரதமர் நரேந்திர மோடி, இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட அனைத்து கட்சி தலை வர்கள், தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் உட்பட தமிழக கட்சித் தலைவர்கள், பிரிட்டன், அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றி யம் உட்பட சர்வதேச நாட்டு அரசுகள், சர்வதேச நிறுவனங் கள் ஆகியவற்றுக்கு சேர்ப்பிக் கப்படும்.

அத்துடன் இந்த ஆவணம் தேசிய ரீதியான கலந்துரையா டல்களுக்காக நாட்டின் பல் வேறு மாவட்டங்களில் பரந்து வாழும் இந்திய வம்சாவளி மலையக மக்களை பிரதிநிதித் துவப்படுத்தும் சிவில் சமூக அமைப்புகளுக்கு வழங்கப் படும். சிவில் சமூக அமைப்புக ளுடன் நாம் நடத்த உத்தேசித் துள்ள கலந்துரையாடல்கள், இலங்கை, இந்தியா, பிரிட்டன் மற்றும் சர்வதேச அரசு நிறுவ னங்களுடன் நாம் நடத்தும் பேச்சுவார்த்தைகளுக்கு அடிப் படையாக அமையும் என நாம் நம்புகிறோம்.

புதிய அரசியலமைப்பு வரைவை தாயரித்து வரும் தனது உத்தேசத்தை இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. புதிய அரசியலமைப்பு வரைவு எழுதப்பட்டு வருவதையும் நாம நிவோம். இந்த பின்னணியில் இன்றைய சூழலில் எழுந்துள்ள புதிய நிலைமைகளை கருத்தில் கொண்டு மலையக மக்கள்தொடர் பாக விரிவுபடுத்தப் பட்ட நிலைப் பாட்டு கோரிக் கைகளை நமது நாட்டு அரசுக்கு அறிவித்து, பேச்சுவார்த்தைகளில் ஈடுபட நாம் உதேசித்துள்ளோம்.

அதேவேளையில் இலங்கை அரசுக்கு இந்திய அரசு வழங்கி வரும் உதவிகள் மற்றும் அதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள புதிய கருத்து பறிமாற்றங்களையும் நாம் அவதானித்து வருகிறோம். இந்த தொடர்பாடல்கள், பொருளாதார ஒத்துழைப்பு விவகாரங்களுடன் மாத்திரம் மட்டுப்படுவது முறையான தல்ல என நாம் நம்புகின்றோம்.

1954 (நேரு-கொத்தா வலை), 1964 (சிறிமா-சாஸ் திரி),1974 (சிறிமா-இந்திரா), ஆகிய ஆண்டுகளில் இலங்கை இந்திய அரசு தலைவர்கள் மத்தியில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களின்படியும், இந்திய பிரதமர்களுக்கும், இலங்கை ஜனாதிபதிகளான ஜே.ஆர். ஜெயவர்த்தன, ஆர். பிரேம தாஸ, சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோ ருக்கு இடையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின்படியும், இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்கள், குறிப்பாக இந்திய வம்சாவளி மலையக மக்கள் தொடர்பில் இலங்கை அரசு டன் இந்திய அரசுக்கும் இருக் கின்ற கடப்பாடுகள் நல் லெண்ண அடிப்படையில் நிறைவேற்றப்படவேண்டும் என்பதுவே தமிழ் முற்போக்கு கூட்டணியின் எதிர்பார்ப் பாகும்.

இதுபற்றி தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையி லான தமிழக அரசுக்கும், தமி ழக அரசியல் கட்சிகளுக்கும் தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பையும் தமிழ் முற் போக்கு கூட்டணி நிறைவேற் றும்.

அதேவேளை மலைநாட்டு தோட்ட தொழிலாளர்களை இலங்கை தீவுக்கு அழைத்து வந்து பெருந்தோட்ட பொரு ளாதாரத்தை கட்டி எழுப்பி, பயன்பெற்றதன் அடிப்படை யில் பிரித்தானிய இராணியின் அரசாங்கத்துக்கும், மலையக மக்கள் தொடர்பில் இருக்கின்ற பெரும் கடப்பாட்டையும் எடுத்து கூறி, பேச்சுவார்த்தை களில் ஈடுபட தமிழ் முற்போக் குக் கூட்டணியின் முடிவு செய்துள்ளது.

நாம் முன்வைக்க உள்ள, இந்திய வம்சாவளி மலையக மக்களின் அபிலாஷைகளை பிரதிபலிக்கும் இந்த அரசியல் ஆவணம், மேற்கண்ட அனைத்து உள்நாட்டு, வெளி நாட்டு நட்புறவு மற்றும் நல் லெண்ண நடவடிக்கைகளுக் கும் அடிப்படையாக அமையும் என நாம் நம்புகிறோம். இது தொடர்பில் நாடெங்கும் வாழும் இந்திய வம்சாவளி மலையக மக்களினதும், அனைத்து சகோதர மக்களி னதும் ஒத்துழைப்புகளையும், ஆதரவையும் நாம் கோரு கிறோம்-என்றார். (அ)

இரு முறை...

இந்த மின்வெட்டு நடைமுறையில் இருக்கும் என்று ஜானக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, நாடு முழுவதும் ஏ, பி, சி, டி என நான்கு வலயங்களாகப் பிரிக்கப்பட்டு சுழற்சி முறையில் மின்வெட்டு இடம்பெறவுள்ளது.

நாள்தோறும் ஏ பிரிவில் பிற்பகல் 2.30 - 3.30 மணி வரையும், மாலை 6.30 - 7.15 மணி வரையும், பி பிரிவில் பிற்பகல் 3.30 - 4.30 மணி வரையும், இரவு 7.15 - 8.00 மணி வரையும், சி பிரிவில் மாலை 4.30 -5.30 மணி வரையும், இரவு 8.00 - 8.45 மணி வரையும், டி பிரிவில் மாலை 5.30 - 6.30 மணி வரையும், இரவு 8.45 - 9.30 மணி வரையும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

இந்தப் பிரிவுகளில் அடங்கியுள்ள வட மாகாண பிரதேசங்களின் விவரம் வருமாறு,

ஏ பிரிவில் கிளிநொச்சி - 3 (பரந்தன் சந்தி தொடக்கம் கௌதாரிமுனை வரை, பரந்தன் சந்தி - புளியம்பொக்கணை வரை, தருமபுரம், விசுவமடு, தேராவில், புதுக்குடியிருப்பு, மாத்தளன், கரைச்சிகுடியிருப்பு, முல்லைத்தீவு நகரம், சில வாத்தை - கொக்கிளாய் வரை, உமையாள்புரம், ஆனையிறவு, இயக்கச்சியின் ஒரு பகுதி),

வவுனியா 1 (பூந்தோட்டம், வைரவப் புளியங்குளம், பட்டாணிச்சூர், குருமண்காடு, வேப்பங்குளம், குளுமட்டு சந்தி, கூமாங்குளம், நெளுக்குளம், சாம்பல் தோட்டம், பாரதிபுரம், விநாயகபுரம், ரேயாந்திரகுளம், நகரிலுப்பங்குளம், அருகம்புல்வெளி, அவுசதப்பிட்டி, நவகம, பழையனூர், உளுக்குளம்.

பி பிரிவு

சுன்னாகம் - 12 (சுன்னாகம், ஏழாலை, குப்பிளான், கட்டுவன், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், உப்புமடம், தாவடி, சுதுமலை, கொக்குவில், குளப்பிட்டி, ஆனைக்கோட்டை, நாவலடி, அட்டகிரி, திருநெல்வேலி, பூநாறி சந்தி, உரும்பிராய், இணுவில், கோப்பாய், கோண்டாவில், ஊரெழு, கரந்தன், நீர்வேலி, அச்செழு, சிறுப்பிட்டி, இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், நாயன்மார்கட்டு, அரியாலை, செம்மணி, புன்னாலைக்கட்டுவன், ஈவினை, வாகையடி.

கிளிநொச்சி 6 (மாங்குளம், வன்னிவிளாங்குளம், அம்பாள்புரம், செல்வபுரம், ஊடறுத்தகுளம், மூன்றுமுறிப்பு, பாண்டியன்குளம், பொங்கர் பூவரசன்குளம், விநாயகபுரம், அனிச்சன்குளம், மல்லாவி, யோகபுரம், தேராங்கண்டல், தெனியன்குளம், துணுக்காய், கல்விளான்.

வவுனியா - 3 (வவுனியா நகரின் ஒரு பகுதி, ரம்பைக்குளம், மூன்றுமுறிப்பு, மதவுவைத்தகுளம், ஈரப்பெரியகுளம், கற்குடாமடு, அளுத்கம, பூ-ஓயா, பாகல அளுத்வத்தை, தவசிக்குளம், குட்செட் வீதி, பண்டாரிகுளம், கோவில்குளம், சமணங்குளம், ஆச்சிபுரம், முருகனூர், கல்நாட்டியன்குளம், ஆசிகுளம், கற்குளம், சிதம்பரபுரம், வெளிகுளம் தொடக்கம் துட்டுவெவ வரை.

வவுனியா - 6 (துட்டுவெவ தொடக்கம் தாண்டிக்குளம் வரை, பத்தினியார் மகிழங்குளம் தொடக்கம் மணிபுரம் வரை, சுந்தரபுரம், சாஸ்திரிகூழாங்குளம், ஈச்சங்குளம் தொடக்கம் ஈஸ்வரிபுரம் வரை, கல்மடு, காகாயன்குளம், கோவில் புளியங்குளம், இரணையிலுப்பங்குளம், பரசன்குளம், சின்னவாளையன்கட்டு, கோகெலிய, ஓமந்தை, புளியங்குளம், மாமடு தொடக்கம் போக்ஸவெவை.

சி பிரிவு

சுன்னாகம் - 8 (ஆறுகால்மடம், நாவாந்துறை, வில்லூன்றி, பண்ணை, கோம்பையன்மணல், கொட்டடி, கொய்யாதோட்டம், ஆஸ்பத்திரி சந்தி கே.கே.எஸ் வீதி, 1, 2, 3ஆம் குறுக்குத்தெரு வீதிகள், குருநகர், மண்டைதீவு, மண்கும்பான், அல்லைப்பிட்டி, சோளவத்தை.

சுன்னாகம் - 7 (சண்டிலிப்பாய், சங்கானை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, மாதகல், இளவாலை, ஐம்புகோளப்பட்டினம், கட்டுப்புலம், சேந்தான்குளம், சுழிபுரம், தொட்டிலடி, வட்டுக்கோட்டை, மூளாய், அராலி, பொன்னாலை, காரைநகர், தோப்புக்காடு, ஊர்காவற்றுறை, நாரந்தனை, புளியங்கூடல், துரையூர், இறுப்பிட்டி, புங்குடுதீவு, குறிகாட்டுவான், வேலணை.

கிளிநொச்சி - 2 (ஜெயந்திநகர், செல்வாநகர், கண்ணகைபுரம், அம்பாள்குளம், உருத்திரபுரம், கோண்டாவில், ஸ்கந்தபுரம், அம்பலப்பெருமாள்குளம், முறிகண்டியின் ஒருபகுதி, அக்கராயன்குளம் தொடக்கம் வன்னேரிக்குளம் வரை, ஜெயபுரம் தொடக்கம் வலைப்பாடு வரை, பல்லவராயன்கட்டு தொடக்கம் வெள்ளாங்குளம் வரை.

மன்னார் 2 (அந்தணன்குளம் தொடக்கம் பல்லாமடு வரை, வண்ணாமோட்டை தொடக்கம் பள்ளிவாசல்பிட்டிவரை, உயிலங்குளம் தொடக்கம் முருங்கன்வரை, அடம்பன் தொடக்கம் திருக்கேதீஸ்வரம் வரை, முருங்கன் தொடக்கம் சிலாவத்துறை வரை, முள்ளிக்குளம், முருங்கன் பிட்டி தொடக்கம் நறுவிலிகுளம் வரை.

டி பிரிவு

சுன்னாகம் - 9 (நாவற்குழி, கைதடி, மறவன்புலவு, அறுகுவெளி, மட்டுவில், நுணாவில், கல்வயல், சரசாலை, சாவகச்சேரி நகரம், கச்சேரி, அரசடி, அல்லாரை, கற்பேலி, வெள்ளம்போக்கடி, மீசாலை, கொடிகாமம், வரணி, நாவலடி, மிருசுவில், எழுதுமட்டுவாழ்.

சுன்னாகம் - 10 (நிலாவரை, சிறுப்பிட்டி, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, தொண்டைமானாறு, கெருடாவில், அக்கரை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, புறாப்பொறுக்கி, மாண்டான், பொலிகண்டி, நெடியகாடு, நெல்லியடி, கரவெட்டி, தாமரைக்குளத்தடி, யாக்கரு, திக்கம், வதிரி, இரும்புமதவடி, மாலைசந்தி, வியாபாரிமூலை, பருத்தித்துறை நகரம், மந்திகை, வல்லிபுரம்.

கிளிநொச்சி - 1 (கிளிநொச்சி நகரம், பரந்தன், இரத்தினபுரம், வட்டக்கச்சி தொடக்கம் இரணைமடு.

வவுனியா -2 (நெளுக்குளம் தொடக்கம் பறனாயங்குளம் வரை, புலிதரித்த புளியங்குளம் தொடக்கம் செக்கடிபுலவு வரை, பிராமணன்குளம் தொடக்கம் பெரியதம்பனை, பெரியபண்டிவிரிச்சான் தொடக்கம் மடு வரை, தட்சினாமருதமடு தொடக்கம் பெரியமடுவரை, ஈச்சிலவாக்கை தொடக்கம் பள்ளமடுவரை, விடத்தல்தீவு தொடக்கம் வெள்ளாங்குளம் வரை, வெள்ளாங்குளம் தொடக்கம் கணேசபுரம்வரை) (ஐ)

காணாமலாக்கப்...

கிளிநொச்சியில் அந்தச் சங்கம் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கிளிநொச்சி மாவட்ட தலைவி க. கோகில வாணி, சங்கத்தின் உபசெயலாளர் ரத்தீஸ்வரன் கவிதா கூட்டாக இந்த அழைப்பை விடுத்தனர்.

மேலும், நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி கந்த சுவாமி ஆலயம் முன்பாக ஆரம்பமாகும் பேரணி அங்கிருந்து நகர்ந்து டிப்போ சந்தியில் நிறைவடையும்.

நீதி அமைச்சர் தெரிவித்த கருத்தானது கலங்க வைத்துள்ளதாகவும், 11 ஆண்டுகளுக்கு மேலாக எமது உறவுகளை தேடிப் போராட்டங்களை முன்னெடுத்த வரும் நிலையில் எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் சர்வதேசம் நீதியை பெற்றுத்தர வேண்டும் என்பதை விலியுறுத்தி முன்னெடுக்கப்படும் போராட்டத்தில் அனைவரும் பங்கு கொண்டு ஆதரவை வழங்க வேண்டும் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ஐ)

கையளிக்கப்பட்ட...

இராணுவத்தினர் பலரை ஏற்றி சென்றனர்.

இந்த நிலையில் நீதி அமைச்சர் எமது உறவுகள் உயிருடன் இல்லை என தெரிவித்துள்ளார். அப்படியாயின் எமது உறவுகளிற்கு என்ன நடந்தது? அவர்களை கொலை செய்துவிட்டீர்களா? இலங்கை அரசாங்கத்திடம் எமக்கு நம்பிக்கை இல்லை. அதனால்தான் நாங்கள் சர்வதேசத்திடம் நீதியை கோரி நிக்கின்றோம் - என்றார். (ஐ)

மருத்துவர்களின்...

அந்தச் சங்கம் நேற்று அறிவித்தது.

முன்னதாக நாளை மறுதினம் திங்கட்கிழமை தொழிற்சங்க போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

மார்ச்சில்...

மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் டொனால்ட் லு எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் உதவி இராஜாங்க செயலாளராக பதவியேற்ற பின்னர், அவர் முதல் முறையாக இலங்கைக்கு விஜயம் செய்கிறார்.

டொனால்ட் லு, நேற்று முன்தினம் தொலைபேசியில் செய்தியாளர்கள் சிலருடன் பேசியபோது அடுத்த மாதம் பங்களாதேஷ் மற்றும் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாக கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் உலக தமிழர் பேரவை ஆகிய தரப்புடன் கடந்த நவம்பர் மாதம் வொஷிங்டனில் நடைபெற்ற பேச்சுவார்த்தை ஒன்றிலும் டொனால்ட் லு கலந்துக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

'13'ஐ...

அமைச்சர் டலஸ் அழகப்பெருமவுடன் இணைந்து அங்குரார்ப்பணம் செய்து வைத்த பின்னர் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இனங்களுக்கு இடையிலான நல்லுறவு வளர்க்கப்பட வேண்டும் என்பதிலும் தமிழ் மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதிலும் அர்த்த பூர்வமான செயல்பாடுகளை வெளிப்படுத்துகின்ற அமைச்சர் டலஸ் அழகப்பெரும, 2013ஆம் ஆண்டு மாத்தறை மாவட்டத்தில் சேர். பொன்னம்பலம் மாவத்தை என்று வீதிக்கு பெயர் சூட்டியதையும் நினைவுபடுத்தினார்.

"நிமிர்ந்தெழ விரும்பும் மக்களுக்கு அறிவூட்டும் கல்வியாக ஊடகங்கள் இருக்க வேண்டும். அரசியல் தலைமைகளின் கருத்துக்களை மக்களிடம் எடுத்து செல்வது போல், மக்களின் ஆழ்மன விருப்பங்களையும் கண்டறிந்து அரசியல் தலைமைகளிடம் சொல்ல வேண்டும். எங்கெல்லாம் மக்கள் சகல உரிமைகளும் பெற்று வாழ்கின்றார்களோ, அங்கெல்லாம் ஊடகங்களும் மக்களை வழி நடத்தி சென்றிருக்கின்றன. போரியலின் பக்கம் கவனம் செலுத்திய ஊடகங்கள் போரியலில் வதைபட்ட மக்களின் வாழ்வியலின் மீதும் அதிக கவனம் செலுத்தியிருக்க வேண்டும்.

துப்பாக்கி முனைகளை விடவும் பேனா முனைகளே வலிமையானவை. ஆகவே ஊடகவியலாளர்களே வலிமை மிக்க போராளிகள், அழிவாயுதங்களை ஏந்திய காலங்கள் முடிந்து விட்டன, இன்று நீங்கள் அறிவாயுதங்களை ஏந்த வேண்டும். ஊடகமும் அறிவாயுதங்களில் ஒன்று. தமிழ் மக்களின் உரிமையை நோக்கிய பயணத்தில் 13ஆவது திருத்தச்சட்டம் நல்லதோர் ஆரம்பம், இதை நாம் ஆரம்பத்திலிருந்தே வலியுறுத்தி வந்த போது எமக்கு பக்க பலமாக சகலரும் இருந்திருந்தால் இத்தனை அழிவுகள் இங்கு நடந்திருக்காது. காலம் கடந்தாவது இன்று எமது யதார்த்த வழிமுறைக்கு பலரும் வந்திருப்பதை நான் வரவேற்கின்றேன்.

ஆனாலும், ஏன் எதிர்க்கின்றோம் என்பதை தெரிந்து கொள்ளாமால் சிலர் எதிர்ப்பதும், ஏன் ஆதரிக்கின்றோம் என்பதைத் தெளிவாக தெரிந்து கொள்ளாமல் ஆதரிப்பதும் விமோசனங்களை ஒருபோதும் தரப்போவதில்லை. இனி நாம் என்ன செய்ய வேண்டும்? எங்கிருந்து தொடங்க வேண்டும்? இவைகள் குறித்த ஆழ்மன உணர்வுகளும் உறுதியும் சகலருக்கு இருக்க வேண்டும். தமிழ் மக்கள் மத்தியில் அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களையே நாம் விரும்புகின்றோம். அதை நோக்கியே உழைத்து வருகின்றோம்", என்றார்.

கொரோனாவுக்கு...

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 949 ஆக உயர்வடைந்துள்ளது. (ஐ)

உயிர்த்த...

நீதிமன்ற நீதிபதிகளான நாமல் பலல்லேல, ஆதித்திய பட்டபெந்திகே மற்றும் மொஹமட் இர்ஸடீன் ஆகியோர் இந்த தீர்ப்பை வழங்கினர்.

மூன்று நீதிபதிகள் அடங்கிய சிறப்பு மேல் நீதிமன்றத்தில், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோவுக்கு எதிராக 855 குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

சட்டமா அதிபர் திணைக்களம் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் எதனையும் சந்தேகத்துக்கு இடமின்றி உறுதிப்படுத்த முடியாத காரணத்தினால் இவர் விடுதலை செய்யப்பட்டார் என தெரிவிக்கப்பட்டது.

அதேபோன்று, முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவும் அனைத்து குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மூன்று நீதிபதிகள் அடங்கிய மேல் நீதிமன்றத்தில் இவருக்கு எதிராக தனித் தனியாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன், இவருக்கு எதிராகவும் 855 குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும், சட்டமா அதிபர் திணைக்களம் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் எதனையும் சந்தேகத்துக்கு இடமின்றி உறுதிப்படுத்த முடியாமையால், பூஜித் ஜயசுந்தர விடுதலை செய்யப்பட்டார் என தெரிவிக்கப்பட்டது. (அ)

வீடுடைத்து...

லுள்ள பூசகர் ஒருவரின் வீட்டில் எவருமில்லாத சந்தர்ப்பத்தை பார்த்து, வீட்டின் கதவை உடைத்துத் திறந்து உள்ளே சென்றவர்கள் 24 பவுண் நகைகளை களவாடி சென்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பூசகர் முறைப்பாடு செய்திருந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்திய யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி நிகால் பிரான்சிஸ் தலைமையிலான குழுவினர் தமது விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதனடிப்படையில் பெறப்பட்ட தகவல்கள் மற்றும் விசாரணைகள் அடிப்படையில் பிரதான சந்தேகநபர் யாழ். கஸ்தூரியார் வீதியில் வைத்து அதிரடியாக கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் திருடப்பட்ட நகைகளை திருட்டுக்கு உடந்தையாக இருந்த நபர் ஒருவர் மூலம் வங்கியில் பணிபுரியும் ஒருவரின் உதவியுடன் வேலணையில் உள்ள வங்கி ஒன்றில் அடகு வைத்தனர் என்றும், இதன் மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டு ஹெரோயின் போதைப் பொருளை கொள்வனவு செய்தனர் எனவும் வாக்குமூலம் அளித்துள்ளார்.

மேலும், ஒரு நெக்லஸ் மற்றும் காப்பு ஒன்றும் தனியார் அடகு நிறுவனம் ஒன்றில் வைக்கப்பட்டுள்ளதால் அதனை மீட்கும் முயற்சியை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். திருடப்பட்ட மிகுதி நகைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

அத்துடன், பிரதான சூத்திரதாரிக்கு உடந்தையாக செயல்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் சுன்னாகத்தைச் சேர்ந்த 28 வயது நபரும், நகைகளை அடகு வைக்க உதவிய வேலணையை சேர்ந்த 30 வயது நபரும் கைது செய்யப்பட்டனர்.

ஹெரோயின் பாவனையால் யாழ்ப்பாணத்தில் இவ்வாறான திருட்டு சம்பவங்கள் அதிகரித்துள்ளன. போதைப் பொருள் பாவனையில் சிக்கியுள்ள இளைஞர்கள் தொடர்பில் பெற்றோர் கூடுதல் கவனம் செலுத்தும்படியும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ஐ-3)

ஈழநாடு
Eelanadu

ஒரே அறிகுறிகளைக் காட்டும் கோவிட் , டெங்கு தொற்றுகள்

கொழும்பு, பெப். 19

நாட்டில் கோவிட்-19 மற்றும் டெங்கு இரண்டு நோய்களும் ஒரே மாதிரியான அறிகுறிகளைக் காட்டுவதாகவும், நோயாளர்களின் எண்ணிக்கையும் ஒரே நேரத்தில் அதிகரித்து வருவதாகவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காய்ச்சல், தலைவலி, உடல்வலி ஆகிய இரண்டு நோய்களிலும் காணக்கூடிய ஒரே மாதிரியான அறிகுறிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளதால் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

நோய் அறிகுறிகள் கண்டறியப்பட்டால் தாமாக ஒரு முடிவுக்கு வராமல் விரைவில் மருத்துவரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இது தவிர, தற்போது கோவிட்-19 மற்றும் டெங்குவின் அறிகுறிகள் ஒரே மாதிரியாக இருப்பதால், தவறாக நோயைப் புரிந்துகொள்ளவும் வாய்ப்பு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது டெங்கு பரவும் அபாயம் குறைந்துள்ள போதிலும், நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் வைத்தி யர் ஷிலந்தி சனவிரத்ன தெரிவித்தார்.

எவ்வாறாயினும், அனைத்து வகையான நுளம்புகள் பெருகும் இடங்கள் குறித்தும் அவதானமாக இருக்குமாறும், டெங்குவைத் தடுக்கும் வகையில் அவற்றை அழிக்கத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்குமாறும் பொதுமக்களை அவர் கேட்டுள்ளார்.

நாட்டில் ஜனவரி மாதத்தில் 7,702 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இறுதியாக வெளியான அறிக்கைப்படி பெப்ரவரி மாதத்தில் 1,801 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். (அ)

அகில எல்லாவல எம்.பிக்கு தொற்று

கொழும்பு, பெப். 19

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் அகில எல்லாவல கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்.

இதனையடுத்து, அவர் தற்போது தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவருடன் நெருங்கிய தொடர்பை பேணியவர்களை கண்டறியும் நடவடிக்கையில் சுகாதாரப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டது. (அ)

பிராந்திய மருத்துவமனைகளுக்கு அம்புலன்ஸ்கள், பிக்கப் வண்டிகள்

கொழும்பு, பெப். 19

நாட்டில் சுகாதார சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக சுகாதார அமைச்சினால் 25 நவீன அம்புலன்ஸ் வாகனங்கள் மற்றும் 38 பிக்கப் வண்டிகள் வைத்தியசாலைகள் மற்றும் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு கையளிக்கப்பட்டன.

இதன் சாவிகள் மற்றும் ஆவணங்கள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவினால் கையளிக்கப்பட்டன.

இந்த வாகனங்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவி மற்றும் சுகாதார அமைப்பு மேம்படுத்தல் திட்டத்துடன் வழங்கப்பட்டுள்ளன.

இந்த பிக்கப் ஒன்றின் விலை சுமார் 11 மில்லியன் ரூபாவாகும்.

தொலைதூரப் பகுதிகள் உட்பட நாட்டின் பல பகுதிகளிலுள்ள மருத்துவமனைகளுக்கு இந்த அம்புலன்ஸ்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன. (அ)

மரண அறிவித்தல்

தோற்றம்
03
-
11
-
1947

மறைவு
03
-
02
-
2022

சுட்டா சஞ்சயன் ரத்னாதிக்கம்

கொழும்பை பிறப்பிடமாகவும் அமெரிக்காவின் கலிபோர்ணியா, சன் பிரான்சிஸ்கோவை வதிவிடமாகவும் கொண்ட சுட்டா சஞ்சயன் ரத்னாதிக்கம் அவர்கள் 03.02.2022 அன்று சன் பிரான்சிஸ்கோவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான அப்டி ரத்னாதிக்கம் (ஆசிரியர், கொழும்பு றோயல் கல்லூரி), செந்திச் செல்வம் ரத்னாதிக்கம் (துணை அதிபர், சைவ மங்கையர் கழகம், கொழும்பு) ஆகியோரின் அன்பு மகனும், Anna, Nils, Marcus ஆகியோரின் அன்பு தந்தையும், ரஞ்சன், விஜி, ஜயந்தன் (ஜம்போ), ரகு ஆகியோரின் அன்பு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் அஞ்சலி, 19.02.2022 சனிக்கிழமை சன் பிரான்சிஸ்கோவில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
Anna: + 1 310 4972271
Nils: + 1 650-766-3482
Marcus: + 1 650-421-6797

தகவல்:
குடும்பத்தினர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில்

தொழுநோயாளர்கள் அதிகரிக்கும் அபாயம்!

★ 18 தொற்றாளர்கள் அடையாளம்!
★ தடுப்பதற்கு விசேட நடவடிக்கை

மட்டக்களப்பு, பெப்ரவரி 19

"மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழுநோயாளர்கள் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டில் இதுவரை 18 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்தத் தொற்றுப் பரவலை தடுப்பதற்கு விசேட நடவடிக்கைகளை சுகாதாரத் துறையினர் முன் னெடுக்க ஆயத்தமாகி வருகின்றனர்",

- இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் குணசிங்கம் சுகுணன் தெரிவித்துள்ளார்.

நேற்று பிற்பகல் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பி லேயே அவர் இதனை தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு,

மட்டக்களப்பு மாவட்டம் தற்போது புதுவிதமான ஓர் அபாயத்தை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது. அதாவது, தொழுநோய் பரவல் ஏற்பட்டு வருகின்றது. கடந்த வருடத்தில் 731 நோயா ளர்கள் இலங்கை முழுவதும் அடையா ளப்படுத்தப்பட்டனர். இதில், 110 நோயாளர்கள் மட்டக்களப்பை சேர்ந்த வர்கள். இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து 30 நோயாளிகள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளனர். இவற்றுள் 18 நோயாளிகள் மட்டக்களப்பை சேர்ந்த வர்களாவர்.

சுகாதாரத் துறை இதனை ஒரு பெரும் பிரச்னையாக அடையாளப்படுத்தியுள் ளது. கோவிட் தடுப்பூசிகள் ஏற்றும் பணிகள் நிறைவுற்றதன் பின்னர் தோல் நோயை முகாமைத்துவம் செய்வதற்கான செயல்பாடுகளை - விழிப்புணர்வை நாங்கள் முன்னெடுக்கவுள்ளோம்.

தொழுநோய் சிகிச்சை சம்பந்தப் பட்ட விடயத்தில் இலங்கையில் காணப்படுகின்ற தொழுநோய் வைத்திய சாலையில் ஒன்றாக மாந்தீவு வைத்திய சாலை காணப்படுகின்றது. தற்போதைய நிலைமையில் தொழுநோயாளர்களை வீட்டில் வைத்து பராமரிக்கும் முறையே காணப்படுகின்றது. அதாவது தனிமைப் படுத்தி - பராமரிப்பின்றி என்ற விடயம் ஒரு காலத்தில் காணப்பட்டாலும் தற் போது அது இல்லை. ஆகவே அதனை நாங்கள் வைத்தியசாலையை மீண்டும் புனரமைக்கும் திட்டம் இல்லை.

தொழு நோயாளர்கள் அந்த வைத்திய சாலையில் காணப்பட்டதன் மூலம்தான் மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழு நோய் தொற்று ஏற்பட்டு இருக்கலாம் என சந்தேகம் பலரிடம் காணப்படுகின்றது. ஆகவே, எதிர்காலத்தில் நாங்கள் இதனை கிழக்கு பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்துடன் இணைந்து சில ஆராய்ச்சிகளை செய்வதற்கு எதிர் பார்த்து இருக்கின்றோம். - என்றார். (ஐ)

வவுனியா பொலிஸாரால் 20 வயது இளைஞன் கைது

வவுனியா, பெப். 19

வவுனியா, சகாயாமாதாபுரம் பகுதியைச் சேர்ந்த 20 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, குருமன்காடு நகரசபை விடுதியில் உள்ள வீடு ஒன்றில் அண்மையில் 3 பவுண் நகை திருடப்பட்டிருந்தது. அத்துடன் வைரவபுளியங்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றிலும் 2 பவுண் நகை திருடப்பட்டிருந்தது.

வீடு புகுந்து இடம்பெற்ற இந்தத் திருட்டு சம்பவங்கள் தொடர்பில் வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த முறைப்பாடு தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில் பொலிஸ் குழுவினர் துரித விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதனைடிப்படையில் குறித்த இரு திருட்டு சம்பவம் தொடர்பில் வவுனியா, சகாயாமாதாபுரம் பகுதியைச் சேர்ந்த 20 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், குறித்த இளைஞரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் திருடப்பட்ட நகைகள் மீட்கப்பட்டுள்ளதாகவும், மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் கூறினர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.02.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

DAN தமிழ் ஒளி

காலை

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்

6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

பகல்

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : WEEK END MOVIE- திமிரு
4.30 மணி : மனிதனின் மறுபக்கம்
5.00 மணி : அந்தி மந்தாரை
6.00 மணி : எதுசரி எதுபிழை-13 ஐ ஏற்பதும் எதிர்ப்பதும் பகுதி-02

இரவு

7.00 மணி : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு

7.30 மணி: டான் சினி மரதன் குறும்பட போட்டி நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி: டான் பட்டிமன்றம்

10.00 மணி : நெற்றிக்கண்

DAN COMEDY HD

காலை

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

பகல்

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

இரவு

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

DAN MUSIC HD

காலை

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

பகல்

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டூ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

இரவு

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

கல்வி tv CHANNEL-1

காலை

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

பகல்

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

இரவு

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

ஜெ தமிழ்

காலை

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

பகல்

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

இரவு

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

CHANNEL HOLY MARY

காலை

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு

பகல்

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
06.00 மணி : இயேசுவின் போதனைகள்
07.30 மணி : அன்பியம்(சனி மறுஒளிபரப்பு)

Pirai Television

காலை

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

பகல்

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

இரவு

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு